# கலை ஊற்று

இதழ்-3



வெளியீடு

உயர்தர மாணவர் மன்றம்

யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்

2017

# கலை ஊற்று

இதழ்-3

வெளியீடு
**உயர்தர மாணவர் மன்றம்**
**யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை**
**மகா வித்தியாலயம்**
**2017**

# பாடசாலைக் கீதம்

இராகம்:- ஹம்சத்வனி　　　　　　　　　　　　　　　　தாளம் :- ஆதி

**விருத்தம்**

வாழ்க நீ மாதா வளர்க நீ மாதா
ஆழ்கடல் மருவும் தொண்டைமானாற்று
மகாவித்தியாலயம் மாண்புடன் வாழ்க

**பல்லவி**

வாழ்க நீ மாதா வளர்க நீ மாதா
ஆழ்கடல் மருவும் தொண்டைமானாற்று
மகாவித்தியாலயம் மாண்புடன் வாழ்க

(வாழ்க)

**சரணங்கள்**

கலை விஞ்ஞானம் கைத்தொழில் வர்த்தகம்
கடற்றொழில் கமத்தொழில் ஆகியவெல்லாம்
மலையென வளர்ந்து மாநிலம் செழிக்க
ஞான ஒளியே நாடெங்கும் பரவிட

(வாழ்க)

அல்லும் பகலும் உனை நினைந்திடுவோம்
அன்னையே உந்தன் அடி பணிந்திடுவோம்
எல்லையில் கல்வி எங்கட்கு ஊட்டி
எம் வாழ்வு வளம் பெறச் செய்தருள்வாயே!

(வாழ்க)

நாடுநலம் பெற நல்லோர் மலிந்திட
காடு கரம்பைகள் கழனிக ளாகிட
பாடும் பாவலர் பண்டிதர் மல்கிட
ஈடும் எடுப்பும் என்றென்றும் வாழிய!

(வாழ்க)

சான்றோர் எனத்தகும் புதல்வரைப் பெற்று
சகல துறையிலும் துலங்கிடச் செய்து
ஈன்ற மைந்தரின் அன்பினைப் பெற்று
இன்பமாய் என்றென்றும் வாழிய! வாழிய!

(வாழ்க)

வாழிய வாழிய வாழியவே!
வாழிய வாழிய வாழியவே!
வாழிய வாழிய வாழியவே!

# நூல் விபரம்

**கலை ஊற்று - 3**


| | |
|---|---|
| முதற்பதிப்பு | : **2017.10.12** |
| இணை இதழாசிரியர் | : அ.விதுசன் |
| | : யோ.தாரணி |
| பொறுப்பாசிரியர் | : திரு செ.கணேசலிங்கம் |
| அட்டை ஓவியம் | : பா.பாஸ்கரன் |
| இதழ் வடிவமைப்பு | : திரு சு.சிவனேஸ்வரன் |
| அச்சுப் பதிப்பு | : சிவரஞ்சனம் ஒப்செற் பிறிண்டேர்ஸ் பலாலி வீதி, கோண்டாவில். |
| வெளியீடு | : உயர்தர மாணவர் மன்றம் யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம். |
| மின்னஞ்சல் | : thondaimanaruvid@gmail.com |
| வலைப்பதிவு | : thondaimanaruvmv.blogspot.com |

**வித்தியாலய அதிபர் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி



## வாழிய! கலை ஊற்று....!

யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய "உயர்தர மாணவர் மன்றம்" மிகவும் சிறப்பாகத் தன் பணிகளை நிறைவேற்றிவருவது பாராட்டுக்குரியது.

க.பொ.த(உ/த) கலை, வர்த்தகப் பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் தமது மன்றத்தினூடாக ஒவ்வொரு வருடமும் "கலை ஊற்று" என்ற சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றனர். இதற்கு ஆசிரியர்களின் வழிகாட்டலும், ஊக்குவிப்பும், மாணவர்களின் பங்களிப்பும் கிடைக்கப் பெற்றுள்ளன. உயர்தர மாணவர்களின் படைப்புக்களான கட்டுரைகள், கவிதைகள், ஓவியங்கள் போன்ற பல்வேறு ஆக்கங்களையும் தாங்கி வருவது சிறப்பம்சமாகும்.

மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் பாடசாலையில் பல்வேறு செயற்பாடுகள் நடைபெறுகின்றன. "கலை ஊற்று" சஞ்சிகை வெளியீடும் அவ்வாறானதே. இதன் மூலம் மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறன்கள் வெளிக்கொண்டு வரப்படுகின்றன. அவர்களின் படைப்பாற்றல் வளர்க்கப்படுகிறது.

இவ்வாறான நல்லதோர் முயற்சியில் ஈடுபட்டுள்ள உயர்தர மாணவர்களையும், ஆசிரியர்களையும் வாழ்த்துவதோடு இனிவரும் காலங்களிலும் இவ்விதழ் தொடர்ந்து மலர வேண்டி எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இரா.ஸ்ரீநடராசா**
**அதிபர்**
**யா/தொண்டைமானாறு வீ.ம.வி.**

# இதழாசிரியர்கள் உள்ளத்திலிருந்து..

எமது வித்தியாலய உயர்தர மாணவர் மன்றத்தினால் வெளியிடப்படும் கலை ஊற்று இதழ் 3 இல் சந்திப்பதில் நாம் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். 2017ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்வில் வரவேண்டிய இவ்விதழ் காலம் தாழ்த்தியேனும் இதழின் தொடர்ச்சி பேணும்பொருட்டு கொண்டுவரமுடிந்ததில் எமக்கு மகிழ்ச்சியே

இந்த இதழ் க.பொ.த உயர்தர கலை மற்றும் வர்த்தகப் பிரிவு மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வந்துள்ளது. மாணவர்கள் ஆக்கத்திறன் மிக்கவர்களாகவும் வாசிப்பு ஆற்றலை மேம்படுத்த வேண்டியவர்களாகவும் உள்ளனர். இம்முயற்சி அதற்கொரு ஊக்கத்தைக் கொடுப்பதாக அமையும்.

இந்த இதழுக்காக ஒரு தொகைப் பணத்தினைத் தந்து ஊக்குவித்த இலங்கை மத்திய வங்கி முகாமைத்துவ உதவியாளரும், வித்தியாலயத்தின் பழைய மாணவியுமாகிய செல்வி வினோதா பரமானந்தம் அவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் விளம்பரங்கள் தந்து ஊக்குவித்த அன்புள்ளங்களுக்கும் இதழ் உருவாக்கத்தில் பங்கெடுத்த அனைவருக்கும் மிகுந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**இணைஇதழாசிரியர்**

**அ.விதுசன்** (தரம் 13, கலை- 2018)

**யோ.தாரணி** (தரம் 12, கலை -2019)

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| வாழ்க்கைப் பயணம் | 02 |
| உணவின் இன்றியமையாமை | 04 |
| வீட்டு நூலகங்களின் அவசியம் | 06 |
| நினைவுகள் | 07 |
| 20ஆம் நூற்றாண்டில் இலங்கையில் ... | 09 |
| மழை | 11 |
| சமய வளர்ச்சியில் ஊடகங்கள் | 12 |
| தோழமை | 16 |
| பணவீக்கமும் தற்காலப்... | 17 |
| போதையினால் பாதை தவறியோர் | 20 |
| ஈழத்து நடனப் பேராசான் | 21 |
| சிந்தனைத் துளிகள் | 24 |
| ஆறுமுகநாவலர் | 25 |
| Reading makes one perfect | 27 |
| மனைப்பொருளியலின் மகத்துவம் | 29 |
| கணனி வைரஸ் | 32 |
| எமது தேசம் | 33 |
| இலங்கையின் முக்கியத்துவம் | 34 |
| ஒழுக்கநெறியில் விளையாட்டின்.. | 37 |
| கணனிசார் விடயங்கள் | 40 |
| இமிரி லக்காதொஸ் | 42 |
| உங்களை நம்புங்கள் | 46 |
| இசையின் மேன்மையும்... | 48 |
| மாணவரும் முகநூலும் | 50 |
| பொது அறிவு | 52 |
| வண்டிற்சவாரி | 53 |
| கலைஊற்று மலர்க்குழு | 59 |
| உயர்தர மாணவர்மன்றம் செயற்குழு | 60 |


ஓவியங்கள் - பா.பாஸ்கரன்

குழுப்படங்கள் : சிவனேஸ் (கபிலா போட்டோ)


றெஸ்ட்
பொயிண்ட்
நீங்கள் வெளியில் அழகாக
உடையுடுத்தி செல்லவேண்டுமா?
மக்கள் உங்களை கவனிக்கிறார்கள்
என்பது உங்களுக்குத் தெரியுமா?
அவர்கள் தம்மை அறியாமல்
உங்கள் ஆடைகளைத்தான்
பார்க்கிறார்கள்
என்பது உங்களுக்கு தெரியாது
இதோ உங்களுக்கான புதிய அழகிய வடிவமைப்புடன்
சிறியவர் முதல் பெரியவர்கள் வரை புத்தம் புதிய
அமைப்புக்களுடன் ஆண் பெண் இருபாலாருக்குமான
ஆடைகளை புதிய டிசைன்களில்
மிகவும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஒரே இடம்
23,பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

# வாழ்க்கைப் பயணம்

வாழ்க்கை எனும் பயணத்தில்
பயணிக்கும் பயணிகள் நாங்கள்
முயற்சி எனும் உணவை
தினமும் புசித்திடுவோம்
துயரங்கள் வந்தால்
சோர்ந்திட மாட்டோம்

வாழ்வில் ஏழ்மையைக் கண்டு
ஏங்கிட மாட்டோம்
உயர்ந்திடும் வழியைக் காண
தாழ்ந்திட மாட்டோம்

தேவையை எண்ணி
உழைத்திட வேண்டும்
மற்றோரைச் சுரண்டி வாழாமல்
எம்மை நாமே ஆளவேண்டும்

நம் பயணத்தை
அளந்து பார்க்க
அளவு கோலே இல்லை.
அளவோடு எதைச் செய்தாலும்
வாழ்வில் வெற்றி காணலாம்.

உலகில் ஓரினம் நாம்
ஒன்றாகி நிற்போம்
சாதிமத பேதமின்றி
ஒன்றாகக் கூடிடுவோம்
உழைக்கும் மக்களாய்
வாழ்ந்திடுவோம்.

நாளைய விடியல்
உனக்காகக் காத்திருக்கிறது.
முயற்சியோடு எழுவாய்
உன் பயணத்தைத்
தொடர்வாய்.

**செல்வி நா.பிரஜீதா**
**தரம் -12**
**கலைப்பிரிவு-2019**

J.N.S. SHOPPING CENTER
**ஜே.என்.எஸ். சொப்பிங் சென்ரர்**



உங்கள் ஆடம்பரத்திற்குத் தேவையான
அழகு சாதனப்பொருட்கள், பலசரக்குப்
பொருட்கள் அனைத்தையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
இங்கே பெற்றுக் கொள்ளலாம்.

**ஆலடி, வல்வெட்டித்துறை** **T.P:0777 290860**

# உணவின் இன்றியமையாமை

உணவு என்பது எல்லா உயிரினங்களுக்கும் இன்றியமையாத ஒன்றாகும். உணவானது தாவரங்கள் மற்றும் விலங்குகள் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. நாம் உண்கின்ற உணவுகளில் பல ஊட்டச்சத்துக்கள் உள்ளன.

அவையாவன காபோவைதரேட், புரதம், கொழுப்பு, விற்றமின்கள், தாதுக்கள் என்பன ஆகும்.

தற்போதைய காலத்தில் சனத்தொகை அதிகரித்த வண்ணமே உள்ளது. அதிகரித்து வருகின்ற மக்கள் தொகைக்குத் தேவையான இன்றியமையாத உணவின் பெரும்பகுதியை இன்று உணவுத் தொழிற்சாலைகள் வழங்கி வருகின்றன. உணவின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் முதலியனவற்றை உலக உணவுத் திட்டம், உலக உணவு தகவல் கவுன்சில் போன்ற பல அமைப்புக்கள் கண்காணித்து வருகின்றன. உணவு சம்மந்தமான பல்வேறு பிரச்சினைகள் பற்றி இவ்வமைப்புக்கள் விவாதிக்கின்றன.

உணவு அனைத்து உயிரினங்களின் பசியினைத் தீர்ப்பதற்கான அடிப்படை உரிமை என கருதப்பட்டு வருகின்றது. அதன் காரணமாகத்தான் பாடசாலைகள், நிறுவனங்கள் போன்ற பல இடங்களில் மதிய உணவு வழங்கி வருகின்றனர்.

சைவ உணவுகள், அசைவ உணவுகள், இதர உணவுகள் என உணவினை வகைப்படுத்தலாம்.

சைவ உணவுகள் செடி, கொடிகளிலிருந்து பெறப்படுவதாகும். உலகில் இரண்டாயிரத்திற்கும் அதிகமான தாவர இனங்கள் உணவிற்காகப் பயிர் செய்யப்படுகின்றன. தாவர உணவுகளாக நெல், கோதுமை, குரக்கன், மரவள்ளி, எள், பருப்பு, கௌபி, பழங்கள், காய்கறிகள், இலைவகைகள், உருளைக்கிழங்கு போன்ற பல பெறப்படுகின்றன.

அசைவ உணவுகள் விலங்குகளிலிருந்து பெறப்படுவனவாகும். அசைவ உணவுகளாக இறைச்சி, கடல் உணவுகள், முட்டை என்பன பயன்படுகின்றன.

இதர உணவுகள் என்பன தாவரங்கள் மற்றும் விலங்குகள் அல்லாத நுண்ணுயிர்களும் உணவில் பயன்படுத்தப்படுவதாகும். காளான், ரொட்டிகள், மது, தயிர் முதலியவற்றை நொதிக்கச் செய்வதற்காக நுண்ணுயிர்கள் பயன்படுகின்றன.

பெரும்பாலான உணவு எப்போதும் விவசாயம் மூலமாகவே பெறப்படுகின்றது. அதிகரித்து வருகின்ற உணவுத் தேவைக்காக நிலையான விவசாய நடைமுறைகள் வளர்ந்து வருகின்றன. இதன் மூலம் நுகர்வோரின் தேவைகள் சிறிதளவு பூர்த்தி செய்யப்படுகின்றது. பல நிறுவனங்கள் வேளாண்மைக் கருவிகளைப் பயன்படுத்தி உணவை உற்பத்தி செய்து வழங்கும் ஒரு புதிய வகை விவசாயத்திற்கு அழைப்பு விடுத்து வருகின்றன.

இருபதாம் நூற்றாண்டில் பல்வேறு நவீன சாதனங்கள் உருவாகிக் கொண்டே இருந்தாலும் இயற்கையைக் காப்பாற்றுவதன் ஊடாக மனித குலத்திற்குத் தேவையான உணவினைப் பெறமுடியும் என்பதனை நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

தொகுப்பு : **இ.சந்துஜா**
**தரம் 13,(2018)**
**கலைப்பிரிவு**

# வீட்டு நூலகங்களின் அவசியம்

நம் வாசிப்புப் பழக்கம் விரிவடைய வீடுகளில் நூலகம் அமைப்பது அவசியம். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று சொல்வார்கள். அதைப்போல புத்தகப் படிப்பு இல்லாமல் ஒரு நாளும் கழிய வேண்டாம். என்னும் எண்ணத்துடன் நூல்களை நாடப்பழக வேண்டும்.

நாம் வீட்டுக்குள்ளேயே சிறிய நூலகம் அமைத்தால் நாம் நினைத்த நேரத்தில் படிக்கலாம். பெற்றோர், சகோதரர்கள் படிப்பதைப்பார்த்து சிறுவர்களாகிய நாமும் ஆர்வம் கொண்டு படிக்க முடியும். இதனாலேதான்

"நூல் பல கல்"

என்றார் ஔவை மூதாட்டி மாதம் ஒருமுறை ஒரு சிறிய தொகையைச் செலவழித்து புத்தகம் வாங்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். நாளடைவில் நிறையப் புத்தகங்களாகி நம் வீட்டில் சிறிய நூலகம் அமைந்துவிடும்.

எமது வீடு சுத்தமாக இருக்கவேண்டும் என்பதற்காக தினமும் அக்கறை எடுத்துக்ககொள்வதுபோல நம் வீட்டில் ஒரு நூலகம் இருக்கவேண்டுமென்பதிலும் கூடிய அக்கறை எடுக்க வேண்டும். அப்போது அவ்வீடு ஓர் அறிவுக்கருவூலமாக விளங்கும்.

வீட்டில் இருப்போர் தினமும் ஏதாவதொரு தொலைக்காட்சி நாடகம் பற்றியோ திரைப்படம் பற்றியோ பேசுவார்கள். அந்த வீட்டில் நூலகமும் இருந்தால் ஒரு புத்தகத்தைப் பற்றி பேசி, விவாதித்து அப்புத்தகம் என்ன சொன்னது அதனால் பெறக்கூடிய தகவல் என்ன என்ற சிந்தனை விரிவடையும். வீண் பேச்சுக்களுக்கு இடமிருக்காது.

எனவே வீட்டு நூலகங்களை வளர்ப்பதன் ஊடாக வாசிப்புப் பழக்கத்தையும் வளர்க்க முடியும். அப்போது பயனுள்ள வகையிலும் அறிவார்ந்த நிலையிலும் எமது பொழுதுகள் கழியும் எதிர்கால வாழ்வும் பலவகையிலும் ஆரோக்கியம் மிகுந்ததாக இருக்கும்.

**செல்வி சி.பாமினி**
**தரம் 13 [2018]**
**கலைப்பிரிவு**

# நினைவுகள்

எத்தனை காலங்கள் சென்றாலும்
எங்கள் வகுப்பறையை மறப்போமா
நாம் செய்த குறும்புகளும்
அதிபரிடம் வாங்கிய கண்டிப்புக்களும்
மேசை மீது எழுதிய பெயர்களும்
செய்யாத வேலைக்கும் செய்த வேலைகளுக்கும்
வாங்கிய திட்டுக்களும்
வற்புறுத்தலுக்காக நீர் ஊற்றி வளர்த்த
பூக்கன்றுகளும் என்றும் நினைவுகளாகவே!

வித்தியாலயம் தந்த அனுபவங்கள்
விலைகொடுத்து வாங்க முடியாதவை.
அவை எங்கள் வாழ்வுக்கு
என்றும்வழிகாட்டுவன.

செல்வி இ. உதயராஜினி
கலைப்பிரிவு 2017

01. ஒரே ஒரு முத்தம் அழுத்தமா கொடுத்துட்டேன்
அதுக்குப்போய் இப்படி கத்தி ஆர்ப்பாட்டம்
பண்ணுதே இந்த பாப்பா - எறும்பின் புலம்பல்.

02. கழுதை - என் முதலாளி என்னை ரொம்ப அடிக்கிறான்.
நாய் - அப்ப எங்கேயாவது ஓடிப்போக வேண்டியது தானே?
கழுதை - அப்படித்தான் நினைத்தேன். ஆனா முதலாளி; மகள் படிப்பில் குறைவான புள்ளி வாங்கினால் இந்தக் கழுதைக்குதான் உன்னை கட்டிவைப்பேன் என்று சொல்லியிருக்கிறார். அதுதான் கொஞ்சம் காத்திருக்கிறேன்.

தேடலும் தொகுப்பும் :
செல்வி இ. உதயராஜினி
**கலைப்பிரிவு** (2017)




# 20ஆம் நூற்றாண்டில் இலங்கையில் பரத நாட்டியத்தின் கலாசாரப் பின்னணி

இலங்கைத் திருநாட்டில் புராதன காலந் தொட்டுப் பரத நாட்டியம் நிலவி வந்துள்ளது. தென்னிந்திய கலாசாரத் தொடர்கள் இதற்குத் துணை புரிந்துள்ளன. இலங்கையில் உள்ள சைவாலயங்களில் சதிர்க் கச்சேரிகள் நடைபெற்று வந்துள்ளமையை வரலாறுகள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவிவரும் வடமோடி, தென்மோடி நாட்டுக்கூத்து மரபுகளும் நமது கலாசாரப் பின்னணியை விளக்குவதாக உள்ளன.

இலங்கைத் தமிழர் மத்தியில் இசை நடன மரபுகள் இந்துக்கோயில்கள் மூலமே வளர்ச்சி பெற்றன. யாழ்ப்பாணத்தில் தமிழரசு நிலவிய காலத்தில் இக்கலைகள் மிக உன்னதமான இடத்தைப் பெற்றிருந்தன. இலங்கையில் 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கேயர்,ஒல்லாந்தர் போன்ற அந்நியரின் படையெடுப்பினால் நமது கலாசாரத்திற்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. அந்நியரின் ஆட்சிக்கு இலங்கையின் கரையோர மாகாணங்கள் உட்படுத்தப்பட்டபோது புராதன இந்து ஆலயங்கள் பலவும் அழிக்கப்பட்டன.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் சிறிது வளர்ச்சி காணப்பட்டபோதிலும் அரச ஆதரவு எதுவும் கிட்டவில்லை. 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையில் கலை வளர்ச்சிக்குப் புத்துயிரளிக்க முற்பட்டவர்களில் கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி குறிப்பிடத்தக்கவராவார். இவர் இயல்பாகவே கலைகள் மீது ஆர்வம் கொண்டவர். இவர் “அபிநய தர்ப்பணம்” என்னும் பரதக்கலை நூலை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புச் செய்து வெளியிட்டார்.

சுவாமி விபுலானந்தரின் யாழ் நூல், மதங்கசூளாமணி போன்ற நூல்களும் இசை, நடன, நாடக வளர்ச்சிக்குத் துணைபுரிந்தன நாடு விடுதலை பெற்றதன் பின்னர் இசை நடனக் கலைகளின் வளர்ச்சி துரிதமுற்றது. இலங்கையில் பரதக் கலை வளர்ச்சிக்கு அதன்

மறுமலர்ச்சிக்குத் தொண்டாற்றியவர்களில் திரு.ஏரம்பு சுப்பையா திரு.ம.கைலாசபிள்ளை, திரு.தொம்மைக்குட்டி, பிரம்மஸ்ரீ வீரமணி ஐயா ஆகியோர் குறிப்பிடத்தக்கோர் ஆவார். தமிழ் நாடக வளர்ச்சிக்குக் கலையரசு க.சொர்ணலிங்கம் ஆற்றிய சேவைகளும் என்றும் நினைவு கூரத்தக்கனவாகும்.


இலங்கையில் 1972ஆம் ஆண்டு கல்விச் சீர்திருத்தத்திற்கமைய அழகியற் கல்வி ஒரு பாடமாக அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பேறாகச் சங்கீதம், சித்திரம், நடனம் ஆகிய கவின் கலைகள் பாடசாலைகளில் கற்பிக்கப்படும் நிலை உருவானது. இவற்றுள் விரும்பிய ஒன்றினை மாணவர் தெரிவு செய்து 6ஆம் வகுப்பு முதல் 11ஆம் வகுப்பு வரை கற்கும் வாய்ப்பினைப் பெற்றனர். க.பொ.த.உயர் தரத்திலும் பரதம் ஒரு பாடமாகத் தற்போது கற்பிக்கப்படுகிறது.

யாழ்-பல்கலைக் கழகத்தின் நுண்கலைப் பிரிவில் இக்கலைகள் கற்பிக்கப்படுகின்றன. நுண்கலைப் பட்டதாரிகள் உருவாக்கப் படுகின்றனர். இவற்றைத்தவிர தேசிய கல்வி நிறுவகத்தினால் நடத்தப்பட்டு வரும் ஆசிரிய பயிலுநருக்காக தொலைக்கல்விப் பாடநெறியிலும் பரதக் கலை ஒரு விசேட பாடநெறியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வடஇலங்கை சங்கீத சபை வருடந்தோறும் பரதக் கலைப் பரீட்சைகளை நடத்தி சித்தி பெறுவோருக்குச் சான்றிதழ்களை வழங்கி வருகிறது. தற்போது இலங்கையின் பல பாகங்களிலும் பரதக் கலை வகுப்புக்கள் பல நடைபெற்று வருவதும் பெருந்திரளானோர் இவ் வகுப்புக்களில் பங்கு கொண்டு பயன்பெறுவதும் வழக்கம்.

இலங்கையில் உள்ள தொலைக்காட்சி நிலையங்களும் பரதக்கலை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி வருகின்றன. ஆடற்கலை நிகழ்ச்சிகள் பலவற்றை அவை ஒளிபரப்பி வருகின்றன.

**செல்வி ச.தேவகி**
**தரம் - 13(2018)**
**கலைப்பிரிவு**




பா.பாஸ்கரன் - தரம் 13(2018) கலைப்பிரிவு.

# மழை

வானமும் பூமியும் காதல் கொள்ள
நடந்ததுவோ விந்தை
வானமகள் மழை முத்தத்தில்
பூமித்தாய் நனைந்து
மேனியெல்லாம் சிலிர்க்க
செழித்தது உலகம்.

தாய் மகள் நேசத்தைப்
பாடவந்த சூரியக் கவிஞனும்
வார்த்தைகளை
ஏழு நிறங்களாய் வடித்து மறைத்தான்.

என்றும் தொடரும்
பாச பந்தங்களால்
வளர்ந்திடும் இவ்வையகமே.

செல்வி சி. சாமந்தி
தரம் 12(2019)
கலைப்பிரிவு

# சமய வளர்ச்சியில் ஊடகங்களின் பங்களிப்பு

எப்படியும் வாழலாம் என்ற மனிதனை இல்லை இப்படித்தான் வாழவேண்டும் என்று விழுமியத்தை, கலாசாரத்தை, பண்பாட்டைப் புகுத்தும் சக்தி சமயத்திற்கே உண்டு. மனிதனுடைய அகங்காரத்தை அடக்கி புத்துணர்ச்சியை உண்டுபண்ணுவது சமயமாகும். மனிதனுடைய ஆன்மீக சக்தியைக் கட்டியெழுப்புவது சமயமாகும். மனிதரை ஒழுக்க சீலராகவும் மாசுமறுவற்றவராகவும் உருவாக்குவது சமயமாகும். மனத்தூய்மை, அன்பு, கற்புநெறி, புனிதத்தன்மை, பக்தி, இரக்கம் ஆகிய குணங்கள் நமது தினசரி வாழ்க்கையைப் பிரதிபலிப்பதற்கு உதவுவது, நம்மை மேம்படுத்திக் கொள்ளவும் ஆன்மீகம் பாதையில் முன்னேற்றம் காணுவதற்கும் ஆகும்.

அமைதியும், ஆனந்தமும் நிறைந்த வாழ்க்கை சமயத்தின் மூலமே கிடைக்கின்றது. சைவசமயத்தின் மூலமே பல அறக்கோட்பாடுகள் முன்வைக்கப்பட்டன. சைவ சமயத்தின் இருப்பிடமே ஆலயமாகும். மனதில் கவலைகளையும், கஷ்டங்களையும் அனுபவித்துக்கொண்டிருக்கும் மக்களை சிறந்த நற்பிரஜைகளாக உருவாக்குவதற்கு சமயம் அடிப்படையாக அமைந்துள்ளது.

இன்றைய காலகட்டத்தில் கலாசார மோகங்களால் எமது சமயம் மழுங்கிப் போகும், நிலை காணப்படுகின்றது. இந்நிலையில் சமயத்தை வளர்ப்பதற்கு பல ஊடகங்கள் முன் வந்துள்ளன. அறநெறிப் பாடசாலைகளை எடுத்துக்கொண்டால் அப்பாடசாலைகள் மூலம் மாணவர்களுக்குப் பல சமயக் கருத்துக்கள், நற்சிந்தனைகள், வழங்கப்படுகின்றன.

தொலைக்காட்சிகளை எடுத்துப் பார்த்தோமானால் ஆலயங்களின் வரலாறுகள், சைவக் கருத்துக்களை வளர்த்தெடுப்பதற்கு மக்களுக்கு உந்து சக்தியாக மிளிர்கின்றன. தொலைக்காட்சி மூலம் அவ்வாறான நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுவதால் நடமாடமுடியாமல் வீட்டில் இருக்கும் மக்கள் கோயிலுக்கு செல்வதில்லை என்ற நிலை நீங்கி தொலைக்காட்சி மூலம் ஆலயங்களில் நடைபெறும் வழிபாட்டு முறைகள், திருவிழாக்கள், தீர்த்தோற்சவம் ஆகியவற்றைக் கண்டுகளித்து மனதினைச் சாந்தப்படுத்த முடிகிறது.

சமயத்தைக் கட்டியெழுப்புவதில் பத்திரிகைகளும் பங்குவகிக்கின்றன. விவேகானந்தருடைய சிந்தனைகள், விபுலானந் தருடைய சிந்தனைகள் ஆகியவற்றை வாழ்க்கையில் கடைப்பிடித்து சிறந்து விளங்குவதற்கு பத்திரிகை நமக்கு ஊடகங்களாகத் திகழுகின்றன. கோயிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற ஒளவையாரின் வாக்குக்கு இணங்க கிராமத்துக்குக் கிராமம் கோயில்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான கோயில்களின் வரலாறுகளை எடுத்துக் கூறும் முகமாகப் பல ஊடகங்கள் சமய வளர்ச்சியில் அக்கறை செலுத்துகின்றன. சமயத்திலுள்ள புராணக்கதைகளினூடாக ஒருவன் நல்ல பாதையில் நடப்பதற்கு ஊடகங்கள் பெரும் பங்களிப்புக்களை ஆற்றி வருகின்றன. சமயத்தின் ஊடாக உருப்பெற்றதே தியானம் ஆகும். சித்தர்கள் மூலமே மூலிகைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவ்வாறு பல்வேறுபட்ட சமயம் சார்ந்த விடயங்களை ஊடகங்கள் பெற்றுத் தருகின்றன. எந்தக் காரியத்தைத் தொடங்கும் முன்னும் இறைவன் மீது நம்பிக்கை வைத்து ஆலயங்களுக்கு செல்கின்றோம்.

தொகுத்து நோக்குகின்ற போது மனித வாழ்க்கைக்கு சமயம் எவ்வாறு அவசியமாக இருக்கின்றதோ அதை விட மேலாக அதை வளர்ப்பதற்கு மக்களிடையே பரப்புவதற்கு சமய நெறி சார்ந்த எண்ணக்கருக்கள் எல்லோரிடமும் நிறைந்து நிற்பதற்கு ஊடகம் அவசியமானது. ஆன்மீகக்கருத்துக்களின் அலைமோதலுக்கு ஊடகம் எனும் கடல் தேவைப்படுகின்றது. எனவே தொலைக்காட்சியின் வளர்ச்சி மேன்மேலும் உயர்ந்து அதன் நோக்கமாகிய சமயத்தின் வளர்ச்சி எல்லாத் திக்குகளிலும் கொடி கட்டிப்பறக்க நிலையாக நிலைத்து நிற்க நாமும் எங்களால் முடிந்த பங்களிப்பை அதற்கு ஆற்றுவோம். சமயமே வாழ்க்கை சமயமே ஒழுக்கநெறி என வாழ்வோம்.

செல்வி **பா.பிரியங்கா**
**தரம் 13 (2018)**
**கலைப்பிரிவு**


சிமாட் பியூட்டி பலஸ்
Bata
Bata
நீங்கள் வெளியில் அழகாக
உடையுடுத்தி செல்லும்போது
மக்கள் உங்களை கவனிக்கிறார்கள்
என்பது உங்களுக்குத் தெரியும்.
அவர்கள் அவர்களையுமறியாமல்
உங்கள் காலணிகளைத்தான்
முதலில் பார்க்கிறார்கள்
என்று தெரியுமா...?
இதோ உங்களுக்கான புதிய அழகிய வடிவமைப்புடன்
கூடிய துல்லியமான உங்கள் கால்களுக்கேற்றவாறு
அமைப்புக்களில் பெற்றுக்கொள்ள வேண்டிய
ஒரே ஸ்தாபனம்
சிமாட் பியூட்டி பலஸ்
மத்திய சந்தை
அச்சுவேலி

# தோழமை

நட்பு
ஒரு சந்தோசத்தின் வேதனையை
ஒரு வேதனையின் சந்தோசத்தை
உணர்த்துவது.

உடமைகளைப் பகிர்ந்து கொள்வதும்
எண்ணங்களைப் பரிமாறிக் கொள்வதும்
எண்ணிப் பார்க்காமல் செலவு செய்வதும்
நட்பின் இயல்புகள்

அம்மா வயிற்றில் சுமந்தாள்
அப்பா தோளில் சுமந்தார்
ஏனென்றால் நட்பு ஒரு சுமை அல்ல.

புரியாத நட்புக்கு அருகில் இருந்தும் பயனில்லை.
புரிந்த நட்புக்கு பிரிவு ஒரு பொருட்டில்லை.
பணம் கண்டு சேர்வது நட்பல்ல.
இதயம் போதுமே உண்மை நட்புக்கு.

செல்வி செ. விந்துஜா
தரம் 12
கலைப்பிரிவு





பா.பாஸ்கரன் - தரம் 13(2018) கலைப்பிரிவு.

# பணவீக்கமும் தற்காலப் பொருளாதாரப் போக்கும்

ஆரம்ப காலத்தில் மானியமுறைப் பொருளாதார முறைமையில் சுயதேவை என்ற சொற்பதம் சிறப்புப்பெற்றது. இவ்வாறு தமக்குத் தேவையானவற்றைத் தாமே உற்பத்திக்குப் பயன்படுத்தியவர்கள் பிற்பட்ட காலங்களில் தமது உற்பத்தி மிகைகளை ஏனையவர்களுக்கு வழங்கித் தமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக்கொண்ட பண்டமாற்றுமுறைப் பொருளாதாரம் தோற்றம் பெற்றது. இத்தகைய முறைகளில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு பொதுவான அலகு ஒன்று கொடுக்கல் வாங்கல் ஊடகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அத்தகைய ஊடகமே தாள், குற்றி நாணயங்களான பணம் ஆகும். இப்பணம் ரூபா என்றும், டொலர் என்றும், ஸ்ரேலிங் பவுண் எனவும் கொள்ளப்படுவதுடன் வேறுபட்ட நாடுகள் வேறுபட்ட நாணய அலகுகளைப் பயன்படுத்துகின்றனர். எனினும் சர்வதேச வர்த்தகத்தின்போது நாணயமாற்று வீதங்களின் அடிப்படையில் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்றனர். எனினும் பணத்தின் பெறுமதியானது அவற்றின் முகப்பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுவதில்லை. அவற்றின் கொள்வனவு ஆற்றலை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது. இக்கொள்வனவு ஆற்றல் கால ஓட்டத்தில் மாற்றமடைகின்ற தன்மையைக் காணக்கூடியதாக உள்ளது. எனினும் பெரும்பாலும் கொள்வனவு வலு குறைவடைகின்ற நிகழ்வே காணப்படுகின்றது. இச்செயற்பாட்டினையே பணவீக்கம் என்று குறிப்பிடுவர்.

பணவீக்கத்திற்கு எதிரான நிலை பணச்சுருக்கம் ஆகும். பொருளாதாரத்தில் பொது விலைமட்டம் தொடர்ச்சியாகக் குறைவடைந்து செல்லுதல் பணச்சுருக்கம் என வரைவிலக்கணம் செய்ய முடியும். சில வருடங்களாக பொது விலை மட்டத்தில் தோன்றும் தொடர்ச்சியான வீழ்ச்சி கடுமையான மந்த நிலையுடன் சேர்ந்து காணப்படலாம். உலகில் அபிவிருத்தியடைந்த கைத்தொழில் நாடுகள் 1890களிலும் 1930 களிலும் இத்தகைய பணச்சுருக்க நிலையை எதிர்கொண்டன. பணவீக்க வீதத்தின் வீழ்ச்சியைக் குறிப்பிடுவதற்குப் பொருளியல் அறிஞர்கள் பணவீக்கமின்மை என்னும் பதத்தைப் பயன்படுத்துவர். பணவீக்கமில்லா நிலையில் விலைமட்டம் உயர்ந்து சென்றாலும் விலைமட்ட உயர்வு வீதம் படிப்படியாகக் குறைவடைந்து செல்லும்.

பொது விலைமட்ட மாற்றம் வெவ்வேறு வேகத்துடன் இடம்பெறமுடியும். பணவீக்கப் போக்கில் காணப்படும் வெவ்வேறு வேகங்களை ஊர்ந்து செல்லும் அல்லது மிதமான பணவீக்கம், பாயும் பணவீக்கம், அதிவிரை பணவீக்கம் என்னும் மூன்று தொகுதிகளுக்குள் அடக்கிக் காட்ட முடியும்.

பெரும்பாலும் பணவீக்கத்தின் முக்கிய விளைவு வருமானமும் செல்வமும் பகிரப்படுவதில் இடம்பெறுகிறது. பணவீக்கத்தில் மறுபங்கீட்டு விளைவை இனங்காண்பதற்கு பணவீக்க கால எல்லைக்குள்ளே பணத்தின் பெறுமதியில் என்ன மாற்றம் ஏற்பட்டது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். பணத்தின் மெய்ப் பெறுமதி என்பது அதனால் கொள்வனவு செய்யக்கூடிய பொருள்கள் சேவைகளின் அளவாகும். விலைமட்டம் உயர்வடையும் அளவுக்கு பணத்தின் கொள்வனவாற்றல் வீழ்ச்சியடையும்.

பணவீக்கம் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் தீய விளைவுகளை உருவாக்கிவிடுகிறது. நிலையான வருமானம் பெறுவோர் பணவீக்கத்தினால் பாதிக்கப்படுகின்றனர். தற்காலப் பொருளாதாரப் போக்கானது பெரிதும் மாற்றமடைந்துள்ளது. உதாரணமாகக் கூறுவதாயின் முன்னைய காலத்தில் மக்கள் சட்டைப்

பைக்குள் பணத்தைக் கொண்டு சென்று கூடைநிறையப் பொருட்களை வாங்கி வருவார்கள். இக்காலத்தில் கூடை நிறையப் பணம் கொண்டு சென்று சட்டைப்பை அளவிற்குள் தான் பொருட்களை வாங்கி வருகிறார்கள். இது பணவீக்கத்துக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இலங்கையின் பணவீக்கப் போக்கானது கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (அடிப்படை 2006 / 2007 = 100) ஆண்டாண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் 2012 இறுதியின் 9.2 சதவீதத்துடனும் 2013 டிசெம்பரின் 4.7 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 2014 இறுதியில் 2.1 சதவீதத்தால் குறைக்கப்பட்டிருந்தது. ஆண்டுச் சராசரி அடிப்படையில் முதன்மைப் பணவீக்கம் 2012இறுதியின் 7.6 சதவீதத்திலிருந்தும் 2013 டிசெம்பரின் 6.9 சதவீதத்திலிருந்தும் 2014 டிசெம்பரில் 3.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

ஆண்டாண்டு அடிப்படையில், மையப்பணவீக்கம் 2014 ஓகஸ்டில் 3.9 சதவீதத்திற்கு உயர்வடைந்ததுடன் அதன் பின்னர் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து 2012 இறுதியின் 7.6 சதவீதத்துடனும் 2013 இன் 2.1 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 2014 டிசெம்பர் இறுதியில் 3.2 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் 2013 இறுதியில் 4.4 சதவீதத்திலிருந்து 2014 இறுதியில் 3.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

இவ்வாறு பணவீக்க வீதம் அண்மைக் காலங்களில் குறைவாக இருப்பதற்கான பிரதான காரணங்கள் உள்நாட்டு விவசாய உற்பத்தி அதிகரித்து வந்தமையால் அவற்றின் நிரம்பல் அதிகரித்து விலைகள் வீழ்ச்சியடைந்தமை, இலங்கை மத்திய வங்கியின் விவேகமான அல்லது செயற்றிறனான கேள்வி முகாமைத்துவக் கொள்கைகள் காரணமாக விலை அதிகரிப்புக்கள் கட்டுப்படுத்தப்பட்டமை ஆகும்.

**செல்வி சி.சஜிதா**
**தரம் - 13(2018)**
**கலைப்பிரிவு**

# போதையினால் பாதை தவறியோர்

போதையினால் பாதை தவறும் மானிடர் எத்தனை
மனிதத் தன்மை அழித்து
மனைவி மக்களை ஏறி மிதிக்கின்றனர்.

மாண்புமிகு சமுதாயத்தில்
வழிதவறி நடக்கின்றனர்.
குடும்பத்தில் குழப்பங்கள்,
குணமாகும் காலம்தான் எப்போது?

போதையோடு கைகுலுக்கி
சமாதியாகும் ஆண்கள்தான் எத்தனை
எண்ணில் அடங்காத சகோதரிகளின்
எதிர்பார்ப்புகள்
மண்ணில் புதையுண்டு போகின்றன.


அன்பான பெற்றோரின் அரவணைப்பு இழந்து
பள்ளி நாள்களை பாதியில் விட்டு
பொறுக்கி என்று பெயர்கேட்டு
பொறுப்பில்லாமல் அலையலாமோ?

மானிடம் மலர
மதுவை ஒழிப்போம்
தேசம் மலர்ந்திட
போதையை ஒழிப்போம்.

**செல்வன் க.வினோத்**
**தரம் 13 (2018)**
**கலைப்பிரிவு.**



பா.பாஸ்கரன்
தரம் 13(2018)
கலைப்பிரிவு.



## ஈழத்து நடனப் பேராசான் திரு. ஏரம்பு சுப்பையா

கலைச்செல்வன் திரு ஏரம்பு சுப்பையா அவர்களின் வாழ்க்கை வரலாறும் நாட்டிய வளர்ச்சியில் ஈழநாட்டில் அவர் ஆற்றிய தொண்டுகளும் இக்கட்டுரையில் நோக்கப்படுகிறது.

இவர் 1922ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13ஆந் திகதி இணுவிலிற் பிறந்தார். தந்தையார் க.ஏரம்பு, தாயார் தங்கமுத்து அம்மாள். இவர் தலை சிறந்த அண்ணாவியாராவார்.

மிருதங்கம் வாசிப்பதில் திறமை வாய்ந்தவர். நட்டுவாங்கம் செய்வதிலும் கைதேர்ந்தவர். புராண இதிகாசங்களை நன்கு அறிந்தவர். இளம் வயதில் பெண் வேடம் தாங்கி நாடகங்களில் நடித்தும் நடனம் ஆடியும் மக்களின் மனதைப் பெரிதும் கவர்ந்தவர்.

1935ஆம் ஆண்டளவில் இவரது திறமையைக் கலைப்புலவர் திரு க.நவரத்தினம் அவர்களும் அவர்களது பாரியார் மகேஸ்வரி தேவி அவர்களும் நன்கு அறிந்தனர். அவர்களது பெரும் முயற்சியில் இவரது நடனத் திறமை அகில இலங்கையிலும் தெரிய வந்தது.

1940ஆம் ஆண்டில் இவர் இந்தியா சென்று காரைக்குடி இராமகான சபாவில் ஓர் நடிகரானார். அக் காலத்தில் மேற்படி சபாவில் இருந்த திருச்செந்தூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் பரதநாட்டியம் பயிலும் வாய்ப்புக் கிடைத்தது. திருவனந்தபுரம் சமஸ்தான வித்வானாயிருந்த நடன கலாநிதி ஸ்ரீ கோபிநாத் அவர்களிடம் சென்னை நடன நிகேதனில் 1946 - 1948 வரை கதகளி, கிராமிய நடனம் என்பவற்றில் சிறந்த பயிற்சி பெற்றார்.

அந்நாளில் ஜெமினியின் தாயாரான சந்திரலேகா, சக்ரதாரி ஆகிய படங்களில் நடனம் ஆடும்வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது.

1948 மார்கழியில் திருவாளர் வி.ஆர் இராசநாயகம் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணம் நடனக்கல்லூரியில் நடன ஆசிரியரானார். 1952இல் அரசினர் பாடசாலைக்கு நடன ஆசிரியராக நியமிக்கப் பெற்றார்.

இலங்கைக்கு விஜயம் செய்த எலிசபெத் மகாராணியார் முன்னிலையில் இந் நடனம் காண்பிக்கப்பெற்றது.

இவரது கலை நிகழ்ச்சிகளை யாழ்ப்பாணத்தில் பார்த்து மகிழ்ந்த பிரபல நடிகர் டி.கே.ஷண்முகம்(ஒளவை சண்முகம்) அவர்களால் இவருக்கு கலைஞர் என்ற பட்டம் வழங்கப்பெற்றது.

1956 இல் கொக்குவில் கலாபவனம் என்ற கலைக்கோயிலை உருவாக்கி உலகின் மாபெரும் சாதனையை நிலை நாட்டினார். கலாபவனத்தால் நடனக்கலையைப் பயின்று பாராட்டுதல்களைப் பெற்றவர் பலர். இவர்களில் ஏழு பெண் கலைஞர்கள் அரங்கேற்றம் செய்து பிரபல்யம் அடைந்தார்கள்.

இவரிடம் பயிற்சி பெற்ற ஸ்ரான்லி அரசினர் மத்திய கல்லூரி மாணவிகள் 1958இல் யுனெஸ்கோ அகில இலங்கை கிராமிய நடனப் போட்டியில் இரண்டு நடனங்களில் முதலிடம் பெற்றனர். 1959இல் டெங்கியில் நடந்த உலக விவசாய பொருட்காட்சி விழாவில் ஆந்திரா கிராமிய நடனக் குழுவினருடன் சேர்ந்து நடனம் ஆடும் வாய்ப்பும் கிடைக்கப் பெற்றது.

1960இல் யாழ் பிரதேச கலை மன்றத்தினால் கௌரவிக் கப்பட்டார். ஏழு கலைஞர்களில் திரு ஏ.சுப்பையா அவர்களும் ஒருவர். அப்போது பொன்னாடை, தங்கப்பதக்கம் போன்றன அளிக்கப்பட்டன. தமிழக முதல்வர் கலைச்செல்வி ஜெயலலிதாவினால் கலைச்செல்வன் என்ற பட்டமும் அளிக்கப்பட்டது.

அவர் கலைப் பணியைச் சிறப்பாகத் தொடர்ந்து செய்து வந்தார். 1973இல் இணுவில் பரமானந்த நூல் நிலையத்தினர் நடாத்திய பொங்கல் விழாவிலே தமது மண்ணிலே பிறந்து தமக்குப் பெருமை தேடித்தந்த திரு ஏ.சுப்பையா அவர்களுக்கு திரு சபா ஆனந்தர் "அபிநயம் அரசகேசரி" என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தார்.

கலைத்துறையில் அரும் பெரும் சாதனைகளை ஆற்றி கலை உலகமே பெருமைப்படக்கூடிய அளவுக்கு நன்கு உழைத்து வந்த அவர் 11.01.1976இல் இவ்வுலகை நீத்தார்.

மிகக்குறுகிய காலத்தில் தமது 54ஆவது வயதிலே தமது வாழ்வை முடித்துக் கொண்டமை கலையுலகிற்கு பெரும் இழப்பாகும்.

**செல்வி சி.கயந்தினி**
தரம் 13 (2018)
கலைப்பிரிவு



## சிந்தனைத் துளிகள்

- ★ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வாய் நிறைய எல்லோரையும் வரவேற்று விடுங்கள்.
- ★ ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாக இருந்தாலும் நாகரிகமாகப் பேசப் பழகிக்கொள்ளுங்கள்.
- ★ தகுதி இருந்தாலும் இல்லாவிட்டாலும் பாராட்டத் தவறி விடாதீர்கள்.
- ★ படித்தாலும் படிக்காவிட்டாலும் பண்பாகப் பேசிக் கொள்ளுங்கள்.
- ★ குற்றங் குறை இருந்தாலும் மற்றவரை மதிக்கத் தவறாதீர்கள்.
- ★ மற்றவர்களுக்கு நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யாது பழகிக் கொள்ளுங்கள்.

*செல்வன் க.வினோத்*
**தரம் 13 (2018)கலைப்பிரிவு**





பா.பாஸ்கரன் - தரம் 13(2018) கலைப்பிரிவு.

# ஆறுமுக நாவலர்

தமிழ் மொழியையும் நல்லொழுக்கத்தையும் சைவசமயத்தையும் வளர்த்தவர்களில் நாவலர் முதன்மை யானவர். மொழிபெயர்ப்புக் கலையில் ஈழத்தவர் தலை சிறந்தவர் என்பதனையும், யாழ்ப்பாணத் தமிழ் செந்தமிழ் என்பதனையும், சென்னைப் பட்டணத்தில் நடைபெற்ற பைபிள் மொழிபெயர்ப்பு அரங்கேற்றத்தின் மூலம் தமிழ்நாட்டிலே நிலைநாட்டியவர் நாவலரே. சைவமும் தமிழும் முன்னேற வேண்டுமாயின் போதனாமொழி தமிழ்மொழியாக அமைய வேண்டுமென்பதனை அவரைப்போல் உணர்ந்தவர் வேறொருவருமில்லை. போதனாமொழி தமிழ்மொழியாக அமையின் அது தமிழ் மக்களுக்குப் பல்வகைப் பயனை அளிக்குமென்பதனையும், அத்தகைய கல்வி தமிழரின் உண்மையான ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு இயற்கையோடு பொருத்தமாயிருக்கும் என்பதனையும் உணர்ந்தமையாலேயே ஊர்தோறும் பள்ளிக் கூடங்களை அமைக்கத் திட்டமிட்டார். மாணவர் செலவின்றிக் கற்க வைத்ததுமின்றி வழி வகையில்லாத மாணவருக்கு உணவும் உடையும் அளித்தார். பாடசாலையில் இலக்கிய இலக்கணத்துடன் கணிதம், தருக்கம், வைத்தியம், வாணிகம், வேளாண்மை, சிற்பம் முதலியவற்றைப் படிப்பிக்க ஒழுங்கு செய்தமையும் இவர் செய்த புரட்சியாகும்.

மாணவருக்கும் பொதுமக்களுக்கும் சைவ உண்மை களை விளக்குவதற்குரிய நூல்களையும் துண்டுப் பிரசுரங் களையும் வெளியிட அச்சகம் நிறுவியதும் அவர் செய்த பெருந்தொண்டாகும். அதன் பயனாகச் சமய அறிவு பலரிடம் பரவியது. மாணவருக்கும் ஏனையோருக்கும் பயன்படக்கூடிய பல நூல்கள் வெளிவந்தன. பிரசங்கஞ்செய்தல், மதப்பிரசாரம் செய்தல், மாணவருக்குக் கல்வி கற்றுக்கொடுத்தல், முதலிய பல பாரிய வேலைகளுடன் 59 நூல்களை எழுதி அச்சிட்டமை வியக்கத்தக்கது. அச்சுக்கூட வசதிகள் மிகக் குறைவாக இருந்த அக்காலத்தில் அதனைச் செய்து முடித்தமை அரிய பெரிய சாதனையாகும்.

ஈழத்திலும் தமிழகத்திலும் சைவம் வாழ ஆறுமுகநாவலர் ஆற்றிய பணி அளப்பரியதென்ற காரணத்தினாலேயே அவர் ஐந்தாம் குரவராகக் கணிக்கப்படுகின்றார். சைவசமய விருத்தியின் பொருட்டு நாவலர் முயன்ற போதும் கிறிஸ்தவரும் ஆங்கில ஆட்சியில் காட்டிய எதிர்ப்பு ஒரு புறமிருக்க சைவ சமயிகளாலே அவமதிப்பும் இடையூறும் பலவாறு செய்யப்பட்டன. "நம்முடைய சைவ சமயிகள் தங்கள் சமயமும் பாஷையும் விருத்தியடையும் பொருட்டு நான் செய்யும் முயற்சிகளுக்கு உதவி செய்யாமை மாத்திரம் அமையாது பெரும்பான்மையும் அவமதிப்பும் இடையூறுமே செய்கின்றார்கள்" என்று நாவலரே வருந்திக் கூறியுள்ளார். இத்தகைய சூழலிற் சைவத்தை வளர்த்தவர் நாவலர்.

கோயில்களில் நடக்கும் ஊழல்களையும் அக்கிரமங்க ளையும் அவற்றிற்குக்காலாகிய தர்ம கர்த்தாக்களையும் காரசாரமாக விமர்சனம் செய்து அம்பலத்துக்கு இழுத்துப் போராடினார்.

இவ்வாறு மிகச் சுருங்கிய கால எல்லையிற் பல துறைகளிலே சாதனைகளை நிலைநாட்டிய தனியொரு மனிதர் நாவலர் விளங்குகின்றார்.

**செல்வன் த.பிருந்தன்**
**தரம் - 13(2018)**
**கலைப்பிரிவு**

# Reading Makes One Perfect

The habit of reading
Is losing ground at present
The students do not read
The teachers do not read
The parents are also like wise
All the books in our school libraries
Are sleeping and sleeping
Without a single person
To have a look at them.
Actually
Vocabulary is the backbone
of every language.
Reading enriches one's
Vocabulary power
And a good reading
Leads the students
To good writing Skills.
Hence,
They can score good marks
In their school exams.

But sorry to say that
Most of the students
Spend their time
With keyboards and screens.
They put their fingers
To the keyboard buttons,
Instead of putting their pens,
To paper.
They have no time to read or write.
They should mind that,
Good books are treasures.
And,
They are a good source of knowledge.
When a library is opened,
Thousand jails are closed.
So My dear students!
Please,
Read,Read,Read
And Read forever.

*Y.Tharany*
**Grade 12 A/L 2019**
**Arts**

# மனைப் பொருளியலின் மகத்துவம்

மனையியல் என்பது 'மனை - இயல', மனை என்பது வீடு, இயல் என்பது தத்துவம். அதாவது மனையில் நடைபெற வேண்டிய அனைத்தையும் மிகத்தத்துவார்த்தமாக எடுத்துக் கூறுவதே இக்கலையாகும். மனையில் இருந்து நல்ல பண்புகளை வளர்த்து போசணையுள்ள, சுவையான உணவுகளைச் சமைத்து, அழகாகப் பரிமாறவும் வீட்டையும் சூழலையும் சுத்தமாக்கி சுகமாகவும் சந்தோசமாகவும் வாழத் தேவையான அறிவை இக்கலை கற்றுக் கொடுக்கிறது.

மனித மூளை விஞ்ஞான வேகத்தில் வளரத் தொடங்கியது. இயந்திரங்கள் வேலைகளை இலகுவாக்கியது. உணவை மட்டும் சுவைத்து ரசித்தவன், தன்னையும் சூழலையும் ரசிக்கத் தொடங்கினான். பண்டமாற்றுப் பணமாக மாறிய போது பணத்தைப் பிற்காலத்திற்காகச் சேமிக்கக் கற்றுக்கொள்கிறான். இதனையும் இக்கலை "வரவு செலவு திட்டம்" எனும் தலைப்பில் ஒரு இல்லத்தலைவி எப்படி சிக்கனத்தைக் கடைப்பிடித்து சேமிக்க வேண்டும் என்பதை விளக்குகிறது.

மனையியல் வெறும் சமையற்கலையாக மட்டும் இருக்க வில்லை. பரந்துபட்ட பாடப்பரப்பினை உள்ளடக்கியதாகவும் மனைக்கருமங்களைச் சிறப்பாகச் செய்யக்கூடிய ஆற்றலை விருத்தி செய்யக்கூடியதாகவும் அமைகின்றது. 1981ஆம் ஆண்டு கல்வி வெள்ளையறிக்கையில் மனையியல் என்னும் இப்பாடம் "மனைப்பொருளியல்" என்ற பெயராக மாற்றப்பட்டது. மனைக்

கருமங்கள் அனைத்திலும் சிக்கனத்தன்மையை இத் தலைப்பு வலியுறுத்துகிறது. இம் மனைப்பொருளியல் 4 பெரும் பிரிவுகளை உள்ளடக்கியபோதும் அவை ஒவ்வொன்றும் பல்வேறு உட்பிரிவுகளைக் கொண்டதாக அமைகின்றது.

நான்கு பிரிவுகள்

1. மனை நிர்வாகம்
2. உணவும் போசணையும்
3. புடவையும் உடை அமைத்தலும்
4. பிள்ளை விருத்தி

மனைப் பொருளியல் படிப்பதனால் ஏனைய பாடங்கள் பலவற்றையும் இங்கு அறிமுகப்படுத்திக் கொள்ளலாம். கணிதத்தின் அளவியலை இங்கும் கற்றுக் கொள்கின்றோம். சித்திரம், ஓவியக்கலை, சுகாதாரம், விஞ்ஞானம், பொருளியல், சித்த வைத்தியம் போன்ற பாடங்கள் உள்ளடங்குகின்றன. நீங்கள் சிந்திக்கலாம் இப்பாடங்கள் எல்லாம் மனைப் பொருளியலில் எங்கு வருகிறதென்று, உங்கள் சந்தேகங்களைத் தீர்ப்பதற்கு சில உதாரணங்கள், “பணம்” என்ற விடயம் கணிதத்திலும் பொருளியலிலும் முக்கிய இடம் பெறுகின்றது. கேக் வெல்ல அலங்கரிப்பிலும் உருவங்களை அலங்கரிக்கும் போது ஒரு மனையாள் ஓவியனுக்கு ஒத்தவளாகின்றாள்.

ஒருவரின் ஆளுமை விருத்தியில் உடை முக்கிய பங்கினை வகிக்கின்றது. ஒருவரின் தோற்றத்திற்கும், உடற்கட்டமைப்பிற்கும் ஏற்றவகையில் உடையினைப் பாங்காக அமைத்துக்கொள்ளக் கூடிய வகையில் இக்கலை பயன்படுகின்றது. ஆடைகளின் தன்மைக்கேற்ப அவற்றினைப் பாவனை செய்யவும் பாதுகாக்கவும் பழகிக் கொள்ள முடிகிறது. மனையைச் சிறந்த முறையில் நிர்வகிக்கவும், வருவாய்க்கு ஏற்ப செலவைச் செய்து மேலதிக வருவாயைப் பெறுவதற்கான வழிவகைகளையும் தருகிறது.

மனைப்பொருளியற் கல்வி ஒரு பெண்ணை நல்ல குடும்பத்தலைவியாகவும் கணவனுக்கு ஏற்ற மனைவியாகவும் நல்ல அறிவையும் நற்பழக்கத்தையும் போதிக்கும் நல்லாசானாகவும், விருப்பத்துக்கமைய போசணையுள்ள சுவையான உணவைத் தயாரித்துப் பரிமாறுவதில் அன்புத் தாயாகவும், இது தவிர வேறு பல சிறந்த இலட்சியப் பெண்ணை உருவாக்கும் சிறப்புமிக்கதாகவும் இக்கலை அமைகின்றது.

ஒரு இல்லம் சிறப்படைய செல்வமிருந்தால் மட்டும் போதாது நல்ல குணமும் நற்செயல்களும் உள்ள ஒரு பெண்ணே மனையைச் சிறப்பிக்க வல்லவள். இதனை திருவள்ளுவர் அழகாக எடுத்துக் காட்டுகின்றார்.

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்"

செல்வி **க.நிதுஷா**
**தரம் - 13(2018)**
**கலைப்பிரிவு**

# கணனி வைரஸ் (Computer Virus)

கணனி வைரஸ் என்பது கணனியைச் செயலிழக்கச் செய்யும் நோக்குடன் ஒரு தனி நபரால் அல்லது நிறுவனத்தால் எழுதப்படும் மென்பொருள். சில வைரஸ் Programs File களை அழித்து அல்லது குழப்பி கணனியை இயக்க முடியாதவாறு செய்யும். மேலும் சில வைரஸ் மீண்டும் மீண்டும் குறிப்பிட்ட Folder களை உருவாக்கி Hard Disk ஐ முழுமையாக நிரப்பிவரும் தன்மை கொண்டது. முதலாவது வைரஸ் Program ஆனது பாகிஸ்தானைச் சேர்ந்த இரட்டைச் சகோதரர்களால் 1986இல் எழுதப்பட்டு பரப்பப்பட்டதாகும்.

வைரஸ்சைப் பரப்பக்கூடிய **Media Types**

Floppy Disk
Flash Memory
Internet
Soft ware

பிரதான வைரஸ்கள் வருமாறு

Trojans
Worms
Logic Bombs

வைரசைத் தடுப்பதற்காக உருவாக்கப்படுகின்ற வைரஸ் எதிர்ப்பு மென்பொருள் Anti Virus ஆகும். இவ் வைரஸ் ஆனது கணனியில் உள்ள ஒவ்வொரு File களையும் தேடி அழிக்கும் தன்மை கொண்டது.

உ+ம் : AVG Anti Virus
Northen Anti Virus
Mcafee Anti Virus

தொகுப்பு : K.ஸ்ரீஜினி
தரம் 13 (2017) கலைப்பிரிவு

## எமது தேசம்

எமது தேசம் இன்றோ பெரும் நெருப்பில் எரிகின்றது
யார் வந்து துயர் துடைப்பார்.

எங்கு பார்க்கிலும் கொள்ளை, கொலை என்ற துயர்
பெருகிப் போனதே

எமது நெஞ்சம் நொருங்கி விட்டதே
யார் வந்து துயர் துடைப்பார்

எம் மண்ணில் எது சட்டம் என எண்ணுகையில்
ஓர் பொழுது போக்குக் கூடம் என்பர்

இனியும் இந்த அவலநிலை வேண்டாம்
மானுடம் அமைதியாய் திகழ்ந்திட வேண்டும்

எம்மை இந்த விண்ணும் மண்ணும் வாழ்த்தட்டும்
எங்கள் மானிட இனமே வாழட்டும்.

**கா.விமல்ராஜ்**
**தரம் 12 (2019)**
**கலைப்பிரிவு**

# இலங்கையின் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் (உற்பத்தி ஆராய்ச்சி)

01. முகமூடி - அம்பலாங்கொடை.
02. சீனித்தொழிற்சாலை - கந்தளாய், ஹிங்குரான, பெல்வத்தை.
03. கடதாசித் தொழிற்சாலை - வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டிய.
04. சீமெந்துத் தொழிற்சாலை - காங்கேசன்துறை, புத்தளம், காலி.
05. தேயிலை ஆராய்ச்சி நிலையம்- தலவாக்கல.
06. இறப்பர் ஆராய்ச்சிநிலையம் - அகலவத்தை.
07. தென்னை ஆராய்ச்சி நிலையம் - லுணுவில.
08. சோயா ஆராய்ச்சி நிலையம் - பல்லேகல, கன்னொருவ.
09. உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் - நுவரேலியா.
10. ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம் - நாவின்ன.
11. விவசாய கால்நடை ஆராய்ச்சி நிலையம்- மகா இலுப்பள்ளம.
12. பருத்தி ஆராய்ச்சி நிலையம்- அம்பாந்தோட்டை.
13. நெல் ஆராய்ச்சி நிலையம் - மகா இலுப்பள்ளம, பத்தலகொட.
14. தொழுநோய் வைத்தியசாலை - மாந்தீவு (மட்டக்களப்பு).
15. கட்டிப்பால் உற்பத்தி - பொலனறுவை.
16. ரயர் உற்பத்தி - களனி.
17. உருக்கு உற்பத்தி - உருவல
18. புடைவை உற்பத்தி - வியாங்கொட, பூகொட.
19. உலோகப்பொருள் உற்பத்தி - சபுகஸ்கந்த.
20. தொல்பொருள் உற்பத்தி - மட்டக்குளிய, யக்கல
21. தாவரவியற்பூங்கா - பேராதனை, ஹக்கல.

22. மிருகக்காட்சிச் சாலை - தெகிவளை.

23. யானைகளின் சரணாலயம் - யால.

24. பறவைகளின் சரணாலாயம் - குமண.

25. பண்பாட்டு முக்கோணவலயம் - அநுராதபுரம், பொலநறுவை, கண்டி.

26. செய்மதித்தகவல் தொடர்பு நிலையம் - பாதுக்கை.

27. ஓட்டுப்பலகை தொழிற்சாலை- ஜின்தோட்டை.


28. எண்ணெய் சுத்திகரிப்பு - சபுகஸ்கந்த.

**செல்வன் அ.விதுசன்**
**தரம் 13 (2018)**
**கலைப்பிரிவு**




**HUTCH**

Day & Night Internet




உங்கள் **Hutch** கணக்கினை
எந்த ஒரு **HNB ATM** இன் ஊடாக
**Recharge** செய்வதன் மூலம்
**10%** வெகுமதியை பெற்றிடுங்கள்.

பகல் நேரமாயினும் அல்லது இரவு
நேரமாயினும்
உங்களுக்கு விரும்பிய நேரத்தில்
இணையத்தினை பாவிக்க முடியும்.
**Internet** குரல் மற்றும் குறுந்தகவல் இணைய




**T.P: 785000580**

Hutchison Telecommunications
Lanka(Pvt) Ltd.
234,Galle Road, Colombo 04
Sri Lanka

**NANTHAVANAM SHOPPING COMPLEX**



**உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு சகல விதமான எல்லாப் பொருட்களையும் குறைந்த விலையில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்.**



Modern Market,
Block "B",
Point Pedro Road, VVT.

**T.P:0778559224**

# ஒழுக்க நெறியில் விளையாட்டு, நடனம், நாடகம் என்பவற்றின் பங்களிப்பு

மனிதன் சமூகமயமாக்கப்பட்ட ஓர் மிருகம் என்றார் ஓர் அறிஞர். ஆம், அது உண்மைதான் சமூகக்கட்டுப்பாடுகள் இல்லாவிடில் மனிதனுக்கும் விலங்குக்கும் வேறுபாடே இருந்திருக்காது. முனித உள்ளம் சிந்திக்கும் உள்ளம். இச்சிந்திக்கும் ஒழுக்க வேலிகளும் கட்டுப்பாட்டு அணைகளும் அவசியம் இல்லாவிடின் மனம் அலைபாய செயல்கள் விபரீதமாகிவிடும்.

மனிதர்களுக்கென்று பல கட்டுப்பாடுகள் ஒழுக்க நெறிகள் உள்ளன. இவற்றை மானிடரிடையே அறிவுறுத்தவும் மேம்படுத்தவும் விளையாட்டும் கலைகளும் சிறந்த ஊடகங்களாக அமைகின்றன.

இவற்றில் விளையாட்டு எங்ஙனம் ஒழுக்க நெறிகளை மேம்படுத்துவதில் வெற்றி பெறுகின்றன என்பதனை ஆழமாக நோக்குவோம். முதலில் பாடசாலைகளில் நடைபெறும் இல்லங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளை ஆராயலாம். அங்கு ஒவ்வொரு இல்ல அங்கத்தவர்களும் தம் இல்லத் தலைவர்களின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பர். அது பிற்காலத்தில் அவர்கள் சேவையாற்றும்போது வேலைத்தளங்களில் அதிகாரிகளுக்கு கீழ்படியும் தன்மையை உருவாக்கும்.

ஒரு போட்டியாளன் அநேகமாக 03 விளையாட்டுக்களுக்கு கூடுதலாகப் பங்குபற்றக் கூடாது என்ற விதியும் உண்டு. இது மற்றவர்களுக்குச் சந்தர்ப்பம் அளிக்கும் மனப்பான்மையினையும் தாராள குணத்தையும் போட்டியாளனின் உள்ளத்திலே வளர்த்திடச் செய்கிறது.

மேலும் ஓட்டப் பந்தயங்களின் போது தடம் மாறாமல் ஓடுவதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இது “நீ உன் வாழ்க்கைப் பாதையில் நேராகவே செல்ல வேண்டும்”. எனப் போட்டியாளனுக்குச் சொல்லாமல் சொல்கிறது. விளையாட்டுக்களில் வெற்றிபெற வேண்டுமாயின் மெய்வருந்த முயற்சி செய்ய வேண்டும்.

இம்முறையாளனின் முடிவில் வெற்றிக்கனி கிட்டும். இது வாழ்க்கைக் களத்தில் மனிதன் களைத்து விடாமல் தொடர்ந்து போராடி வெற்றி பெற வழி வகுத்துள்ளது.

மேலும் மூன்று முறைகளுக்கு அதிகமாக தவறு இழைத்தால் போட்டியாளர் மைதானத்திலிருந்து வெளியேற் றப்படுவர். இதன் மூலம் எந்த தவறுக்கும் மன்னிப்பு உண்டு. என்ற சீரிய கொள்கை மனித உள்ளத்தில் விதைக்கப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் மிகுந்த ஒழுக்க நெறிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. பஞ்சமா பாதகங்களில் ஒன்று “போதை” விளையாட்டு வீரர்கள் போதைமருந்து பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ள ஒன்றாகும். முன்பு நடந்த ஒலிம்பிக் போட்டியின்போது போதைப்பொருள் பாவித்தமை கண்டுபிடிக்கப்பட்டமையினால் விளையாட்டு வீரர் பென்ஜோன்சன் வெளியேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாடகம் ஒழுக்கத்தை மக்களின்பால் எடுத்துக்கூற சிறந்த கருவி. நல்லொழுக்கங்களை நாடக மாந்தர் வாயிலாக வலியுறுத்த

முடிகின்றது. சீரிய வாழ்வினை மேற்கொண்டோர் சிரிப்பினையும் தீய வாழ்வு வாழ்ந்தோர் இழிவினையும் பெறுவர் என்பதை பிஞ்சுப் பாலகன் முதல் பஞ்செனை நரைத்த முடியுடைய முதியோர் வரை யாவர்க்கும் தெளிவாக சொல்ல முடியும்.

கற்பின் சிறந்த கண்ணகியை நாடக மேடையில் காணும் மங்கையர் மனதினுள் கற்பொழுக்கம் அழுத்தமாய்ப் பதிகிறது பிறர் மனை கவர்ந்த பொல்லாதவர்களுக்கு நிகழ்ந்த பொல்லாப்பை நாடக மேடையில் காணும் ஆடவர் உள்ளம் அஞ்சி நடுங்குகின்றது. அப்பொழுது தன் மனதிலுள்ள கறைகளைக் அவன் கழுவிக் கொள்கின்றான். புறாவிற்கு இரங்கும் சிபியைக் காண்கையில் பார்ப்போனின் உள்ளத்திலும் இரக்க உணர்வு ஒளிர்ந்து கொள்கிறது.

இவ்வாறான பல முறைகளில் ஒழுக்க நெறியில் விளையாட்டு, நடனம், நாடகம் என்பன பாங்கு கொள்கின்றன எனலாம்.

**செல்வி நா.பிருந்தா**
**தரம் - 13(2018) கலைப்பிரிவு**



# கணனி சார் விடயங்கள்

01. கணனி யுகத்திற்கு வித்திட்டவர்கள் - சீனர்கள்

02. கணனியின் தந்தை எனப் போற்றப்படுவர் - சாள்ஸ் பபேஜ்

03. இணையத்தின் தந்தை - வினிட்செர்ப்

04. முதன்முதலில் உருவாக்கப்பட்ட தனிப்பட்ட கணனியின் பெயர் - அப்பிள்

05. 1945இல்-முதலாவது தானியங்கி கணனி கண்டறிப்பட்டது.

06. Multi Media(பல்லூடகம்) என்பது - வீடியோ, தொலைபேசி போன்றவற்றை நவீன தொழில்நுட்பங்கள் மூலம் தகவலை பரிமாறிக் கொள்ளும் முறையாகும்.

07. W.W.W (World Wide Web) இது 1993இல் உருவாக்கப்பட்டது. ரிம்யோனர்ஸ் லீயால் சுவிஸ்சிலாந்தில் உருவாக்கப்பட்டது.

08. Super Computer என்பது - அதிவேகமாகச் செயற்படும் கணனிகளாகும். இது விண்வெளித்தரவுகள். வானிலை அறிவித்தல்கள், பாதுகாப்புத்தரவுகள் சேகரிப்பு போன்றவற் றிற்குப் பயன்படுகின்றது.

09. International Network என்பதன் சுருக்கமே - Internet என அழைக்கப்படுகின்றது.

10. கணனி வைரஸ் - கணனியில் ஏற்கனவே சேகரித்து வைக்கப்பட்டுள்ள தகவல்களை அழிக்கும் நோக்கில் ஊருவாக்கப்பட்டுள்ள ஒரு Programme கணனி வைரஸ் எனப்படும்.

11. Website இணையத்திற்கு தகவல்களை அனுப்பும் மையங்கள் ஆகும். அதாவது இன்ரநெற்றில் பரவிக்கிடக்கின்ற பல இலட்சக் கணக்கான கணனிக்கோவைகளின் வலையமைப்பாகும்.
13. கணனி விஞ்ஞானத்தில் Binary Codes எனும் குறியீட்டில் பயன்படுத் தப்படும் இலக்கங்கள் 0, 1 கணனி மௌஸை கண்டறிந்தவர் டக்ளஸ்கால் என்கர்பார்ட்டன்.

தொகுப்பு :கோ.ஸ்ரீஜினி
தரம் - 13(2017)
கலைப்பிரிவு

---

செல்வமயில்
உரிமையாளர்-வை.தயாபரன்
பல்பொருள் வாணிபம்



சகலவிதமான வீட்டுக்கு தேவையான
உணவுப் பொருட்கள்,
குளிர்பான வகைகள்,
மரக்கறிகள் மற்றும்
பாடசாலை உபகரணங்கள்
அனைத்தையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தானம்
செல்வமயில் பல்பொருள் வாணிபம்.
T.P:0773091934
காட்டுப்புல வீதி, தொண்டைமானாறு

# இமிரி லக்காதொஸ்

பொப்பரின் பொய்யாக்கல் தத்துவத்திற்கும் கூனின் தொடர்பு வாதத்திற்கும் இடையிலான முரண்பாட்டைத் தீர்ப்பதே விஞ்ஞான மெய்யியலுக்கு லக்காதொஸின் பங்களிப்பாகும்.

விஞ்ஞானிகள் பொய்ப்பிக்கப்படக் கூடிய ஏதாவதொரு ஆதாரத்தை, சான்றைப் பெற்றவுடன் உடனடியாக முழுமையானதும் ஆற்றல் மிக்கதுமான புதிய கருதுகோளை முன்வைப்பதன் மூலம் அக் கொள்கையை உடனே நிராகரிக்க வேண்டும், என்பதை பொப்பர் உட்கிடையாகக் கொண்டிருந்தார்.

ஆனால் தோமஸ்கூன் சாதாரண காலங்களை விஞ்ஞானம் கொண்டிருக்கின்றதென்றும் அதில் விஞ்ஞானிகள் அசாதாரண தோற்றப்பாடுகள் என்ற வகையில் தமது கொள்கைகளைத் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும், பின் அவை மிகப்பெரும் எண்ணக்கரு மாற்றத்திற்கு இட்டுச் செல்லக் கூடியதாகவும் உள்ளன என்றும் குறிப்பிடுகின்றார்.

விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களின் தருக்கம் என்ற நூலில் விஞ்ஞானக் கொள்கைகள் முதன்முதலில் முன்மொழியப்படும்போது எதிரான ஆதாரங்களைக் கொண்டிருந்ததென பொப்லர் குறிப்பிடுகின்றார். லக்காதொஸ் Science and Pseudo Science lecture இல் பல கொள்கைகள் பிறப்பிலேயே நிராகரிக்கப்பட்டவை என பொப்பருக்குத் தெரியும் என்கிறார்.

எவ்வளவாயினும் நல்ல விஞ்ஞானிகள் தமது கொள்கை களுக்கு எதிரான ஆதாரங்களைக் கணக்கிலெடுக்காது விட்டமைக்குக் காரணம் அவர்கள் ஒன்றில் அதனை விளக்குவதனூடாகவோ அல்லது கொள்கையைத் திருத்தியமைப்பதனூடாகவோ கவனத்தில் கொண்டிருந்தார்கள் என்பதாகும் என்பதை கூன் உட்கிடையாகக் கொண்டிருந்தார். விஞ்ஞானிகளின் மெய்யான நடத்தையை பொப்பர் விபரிக்கவில்லை மாறாக ஒரு விஞ்ஞானி எதை செய்யவேண்டும் என்பதையே விபரிக்கின்றார். கூன் மெய்யான நடத்தையை விபரிக்கின்றார்.

இவ் இருவருடைய முரண்படும் நோக்கு நிலையை சமாதானப்படுத்தக் கூடிய முறையியலை லக்காதொஸ் தேடுகின்றார். வரலாற்றுப் பதிவுகளுடன் இணைவுடையதும் விஞ்ஞான வளர்ச்சி தொடர்பாக அறிவார்ந்த அடிப்படையொன்றை தரவல்லதுமான முறையியலை லக்காதொஸ் தேடுகின்றார்.

கொள்கை என நாம் எதனைக் கருதுகிறோமோ லக்கா தொஸ்சைப் பொறுத்தவரை அது காலத்திற்குக் காலம் விருத்தி செய்யப்பட்ட சிறிதளவு வேறுபட்ட கொள்கைகள் பரிசோதனை நுட்பங்களின் வெற்றியாகும். இவை பொதுக்கருத்தியலைத்தருவன. லக்காதொஸ்சின் வார்த்தையில் கூறின் Hord-Core ஆகும். இத்தகைய மாற்றங்களின் தொகுப்பை லக்காதொஸ் ஆய்வுத் திட்டங்கள் Research Programmes என அழைக்கிறார். ஆய்வுத் திட்டமொன்றில் ஈடுபடுகின்ற விஞ்ஞானிகள் கொள்கைகளின் மைய விடயங்களை பொய்யாக்கல் முயற்சியிலிருந்து துணைக் கருதுகோள் எனும் பாதுகாப்புப் பட்டியை திருத்தியமைத்தல் அல்லது விருத்தி செய்தல் ஆய்வுத்திட்டத்திற்கு இன்றியமையாத வகையில் தேவையற்ற விடயமல்ல என்பதைக் காட்ட லக்காதொஸ் விரும்புகின்றார்.

ஒரு கருதுகோள் உண்மையா அல்லது பொய்யா எனப் பார்ப்பதற்குப் பதிலாக ஒரு ஆய்வுத்திட்டம் மற்றையதை விட நல்லதா என நோக்க முற்படுகின்றார். சில விடயங்களைப் பொறுத்தவரையில் ஆய்வுத்திட்டங்கள் முன்னேற்றகரமானது என விபரிக்கலாம்.

அவ்வாறு விபரிக்கும்போது அதன் எதிர் ஆய்வுத்திட்டங்கள் படைப்பாற்றலற்றதாகும். ஆய்வுத்திட்டம் முன்னேற்றகரமானது எனக் கூறுவது அதனது வளர்ச்சி வியப்புமிகு புதிய நேர்வுகளின் கண்டுபிடிப்பு புதிய பரிசோதனைசார் நுட்பங்களின் விருத்தி அதிகமான எதிர்வு கூறல்கள் போன்றவற்றால் சுட்டப்படும் படைப்பாற்றலற்ற கருதுகோள் வளர்ச்சியின்மையால் சுட்டப்படும்.

புதிய பரிசோதனைசார் நுட்பங்களின் விருத்தி அதிகமான எதிர்வு கூறல்கள் போன்றவற்றால் சுட்டப்படும் படைப்பாற்றலற்ற கருதுகோள் வளர்ச்சியின்மையால் சுட்டப்படும்.

நம் புதிர்மிகு சிக்கலான கொள்கைகளை முன்மொழி கின்றோம். அத்துடன் இயற்கை அதனை இசைவற்றதெனக் கூறலாம். இத்தகைய இசைவின்மை ஆய்வுத்திட்டத்தைக் கைவிடாமல் நீக்கப்படலாம். அதாவது Hard core மட்டும் தனியே விட்டு விட்டு Hard core மாறால் துணைக்கருதுகோள்களை மாற்றியமைப்பதன் மூலம் இசைவின்மையை நீக்கலாம். நியூட்டனின் இயக்கம் பற்றிய மூன்று விதிகள் பற்றிய உதாரணம் மூலம் எடுத்துக்காட்டப்படுகிறது. நியூட்டனின் முறைமைக்குள்ளே (ஆய்வுத்திட்டம்) இம் மூன்று விதிகளும் பொய்யாக்கலுக்குட்படாதவை ஏனெனில் அவைதான் ஆய்வுத் திட்டத்தின் Hard core

ஆய்வுத்திட்டமொன்று முன்னேற்றகரமானதெனில் அசாதாரண தோற்றப்பாடுகள் எனும் பெயரில் அந்த ஆய்வுத்திட்டத்தில் நிலைத்திருப்பதற்கு துணைக்கருதுகோள்களை மாற்றுவது விஞ்ஞானிகளுக்குக் கிடைக்கும் நியாயமாகும். எவ்வாறாயினும் ஆய்வுத்திட்டம் படைப்பாற்றலற்றதெனில் அது தனது போட்டி ஆபத்தை எதிர்நோக்குகின்றன. அது பொய்யாக்கப்பட முடியும். அந்த ஆய்வுத்திட்டத்தை விடத் தரமான ஆய்வுத்திட்டமொன்றினால் அது பொய்ப்பிக்கப்பட முடியும்.

தொகுப்பு : **T.சாளினி**
**தரம் - 13(2018)**
**கலைப்பிரிவு**

# செல்வா உணவகம் அன் கூல்பார்

உரிமையாளர் துரை

## சைவ, அசைவ உணவகம்



உங்களுடைய சகல விதமான
கொண்டாட்டங்களுக்கும்
தேவையான
அனைத்து வகையான
உணவு வகைகளையும்
இங்கே ஓடர் செய்து
பெற்றுக்கொள்ளலாம்.





சகலவிதமான சிற்றுண்டிகள்
மற்றும்
குளிர் பானங்கள்
போன்றவற்றையும்
ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ள
நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்.



தொ.இல
077 2199479
077 1579336
07 66693323

**காங்கேசன்துறை வீதி, மதவடி, வல்வெட்டித்துறை**

# உங்களை நம்புங்கள்

தன்னம்பிக்கை என்பது தன்னை நம்புதலாகும். கடினஉழைப்பு, விடாமுயற்சி, திட்டமிடல் என்றெல்லாம் சொல்லுகின்றோம். இவைகளையெல்லாம் சும்மா வெறுமனே பின்பற்ற முடியாது. தன்னம்பிக்கை இருந்தால்தான் அவைகளெல்லாம் கைகூடும். எனவே எல்லாவற்றுக்கும் அடிப்படை தன்னை நம்புதலாகும்.

சிறிதளவேனும் தன்னம்பிக்கை இல்லாதவர்கள் யாருமே இருக்க முடியாது. பிச்சைக்காரன் கூட நான் பிச்சையெடுத்தால் இவ்வளவு சம்பாதிப்பேன் என்ற தன் மீதுள்ள நம்பிக்கையில்தான் களத்தில் இறங்குகிறான். இயற்கையிலே நாம் நம் மீது நம்பிக்கை கொண்டவர்களாகவே இருக்கின்றோம். ஆனால் அது போதுமான அளவு இருப்பதில்லை அதை வளர்த்துக் கொள்வதே நம் வளர்ச்சிக்கான சரியான வழியாகும். சிறிதளவு நம்பிக்கையை வைத்துக்கொண்டு செயலில் இறங்கினால் இறுதியில் சோர்ந்து, துவண்டு போய்விடுவோம். முழுவதுமாக நிரம்பப் பெற்ற நம்பிக்கையே வெற்றியின் உச்சியில் நம்மைக் கொண்டு செல்லும்.

உங்கள் பலவீனம், சோம்பல், அறியாமை, எதிர்மறைச் சிந்தனைகள் இப்படி உங்களிடமுள்ள அழிவு சக்திகளை விட பலம், உற்சாகம், அறிவு போன்ற ஆக்க சக்திகளை அதிகரிக்கச் செய்யும்போது தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். இப்படி ஏற்படும் நம்பிக்கையைக் குறைவுறாமல் தினந்தோறும் அவற்றை மதிப்பீடு

செய்ய வேண்டும். நேற்றைவிட இன்று வளர்ச்சிய டைந்துள்ளேன். இன்றையதை விட நாளை வளர்ச்சியடைவேன் என்பதில் உறுதியாயிருங்கள்.

எத்தனை தோல்விகளை நீங்கள் சந்தித்திருந்தாலும் "வீழ்வது இழிவல்ல வீழ்ந்தே கிடப்பதுதான் இழிவு" எனவே "விழித்துக் கொள் வெற்றியை நோக்கி விரைந்திடு சற்றும் தாமதியாதே" என்று ஆழ்மனதில் பதித்துக் கொள்ளவேண்டும்.

"இவளா! இவளுக்கு என்ன தெரியும் இவளுக்கு ஒன்றுமே தெரியாது, இவளிடம் அப்படி ஒன்றுமில்லை" இப்படி உங்களைப் பற்றி பேசுகிறவர்களுக்கு நீங்கள் நிரூபிக்க வேண்டியது உங்களிடம் தன்னம்பிக்கை இருக்கிறது, என்பதைத்தான் நீங்கள் யாராகவும் இருக்கலாம் தன்னம்பிக்கை கொள்ளுங்கள். உங்கள் ஆர்வத்தை, திறமையை சற்றுக் கண்ணோட்டமிடுங்கள். அடுத்த கணமே களத்தில் இறங்குங்கள். எதையாவது சாதியுங்கள், திரும்பிப்பார்க்க வேண்டாம். உங்கள் கண்முன்னே தெரிவதெல்லாம் வெற்றிப்படிக்கட்டுக்களாக இருக்கட்டும். வெற்றிப்படிகளில் பயணியுங்கள். மற்றவர்களுக்குச் சிறந்த முன்னுதாரணமாய் இருங்கள்.

தேடலும் தொகுப்பும் :
**செல்வி சி.ஷர்மி**
தரம் - 12(2019)
கலைப்பிரிவு

# இசையின் மேன்மையும் ஆற்றலும்

இஜச என்ற சொல்லுக்கு இசையவைப்பது என்பது பொருள் மனிதனையும் மற்ற உயிரினங்களையம் ஏன் இறைவனையும் இசையவைக்கின்ற இணங்கச் செய்கின்ற ஓர் அருஞ்சாதனம் இசை. ஆங்கிலத்தில் இசையை Music என்று அழைப்பர். இச்சொல் Mousa என்ற கிரேக்க தேவதைகள் விரும்பிய,ஊக்குவித்த ஒரு கலை. பின்பு Music என்று அழைக்கப்பட்டது.

இஜச என்பது கட்டுப்பாடுள்ள இனிமையான ஒலியாகும். கட்டுப்பாடில்லாத, இனிமையைத் தராத ஒலியை இரைச்சல் என்று கூறுகிறோம். இஜச ஒலியை வடமொழியில் நாதம் என்று அழைக்கின்றனர்.

இறைவன் இசைவடிவாய் இருக்கிறார் என்பது ஒரு முது மொழியாகும். “ஏழிசையாய் இசைப் பயனாய் ”என்று சுந்தர மூர்த்தி நாயனார் பாடியுள்ளார். அப்பர் பெருமான் “ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே”என்று இறைவனை எண்ணி உள்ளம் உருகுகின்றார். திருஞானசம்பந்தர் இறைவனை “பண்ணமர் வீணையினான்” என்று வர்ணிக்கின்றார். திரைப்படப்பாட்டிலும் “சங்கரா நாத சரீரா” என்று நாம் கேட்டு வருகின்றோம். இவ்வாறு இறைவனுக்கும் இசைக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதை நாம் உணர்வதால் இசையை ஒரு தெய்வீகக் கலை என்று அழைக்கின்றோம்.

பிறப்பிலிருந்து இறக்கும்வரை மனிதன் இசையில் ஊறியிருக்கிறான். அழும் குழந்தை தாலாட்டுப் பாட்டைக் கேட்டவுடன் அழுகையை நிறுத்திவிட்டுத் தூங்க ஆரம்பிக்கின்றது. தூக்கமில்லாமல் அல்லற்படுவோர் அனைவரும் நல்ல இசையை ஒலிப்பதிவுநாடா வழியாக கேட்பதின் விளைவாக நல்லுறக்கம் கொள்வதாகவும்

ஒவ்வொரு நாளும் குரலிசைப்பயிற்சி செய்வதால் குறட்டையிடும் பழக்கத்தை நீக்க முடிகிறது என்றும் மருத்துவ ஆய்வாளர் டாக்டர் எலிசபெத் ஸ்காட் கூறுகிறார்.

உடல்நலம், மனநலம் குன்றிய நோயாளிகளும் மன இறுக்கநிலை பாதிக்கப்பட்டவர்களும் நல்ல இசையைக் கேட்பதால் பயனடைவதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள். வயது முதிர்ச்சி காரணமாக நினைவாற்றலை இழந்தவர்கள் நல்லிசை வழியாக அதை மீண்டும் பெறக்கூடும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் பாட்டின் மூலம் அரிய கருத்துக்களைக் கற்றுக்கொள்கின்றனர். பக்திப்பாடல்கள் மக்கள் மனதை இறைவன்பால் ஈர்க்கின்றன. கடின வேலை செய்யும் உழைப்பாளிகள் களைப்பைத் தீர்க்கப் பாடிக் கொண்டே வேலை செய்கின்றனர். ஒப்பாரி போன்ற பாடல்களாலும் வேறு வகைப்பாடல்களாலும் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்து கின்றனர். எனவே பிறப்பிலிருந்து இறப்புவரை மனிதன் இசையோடு இணைந்துள்ளான் என்பதை உணர்கிறோம்.

ஓர் இசைக்கலைஞன் "தீபக்" என்ற இராகத்தைப் பாடி நெருப்பு உண்டாகச் செய்வதாகச் சொல்லப்படுகின்றது. முத்துச்சுவாமி தீட்சிதர் அமிர்தவர்ஷணி இராகத்தைப் பாடி மழை வருவித்ததாக வரலாற்றில் அறிகிறோம். இந்த இராகத்தைச் சிறப்பாக இசைத்தால் வறட்சிக் காலத்திலும் மழையைப் பெறலாம் என்று நம்பப்படுகிறது. பசுக்கள் இனிய இசையைக் கேட்பதின் விளைவாக நிரம்பப் பால் கொடுப்பதாக அறிகிறோம். பயிர்களும் நன்கு வளர்வதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆகவே இசை மனித வாழ்வை வளப்படுத்துவற்காக இறைவன் அளித்துள்ள பெருங்கொடை என்றால் மிகையாகாது.

**செல்வி யோ. துவாரகா**
**தரம் 13.(2018)**
**கலைப்பிரிவு**

# மாணவரும் முகநூலும்

2004 ஆம் ஆண்டு Mark Elliot Zuckerberg என்பவரால் உருவாக்கப் பட்ட facebook அதிகமானவர்களைப் பீடித்துள்ள நோய்போல் ஆகிவிட்டது. இன்றைய நவீன உலகம் நமது கைக்குள் சுருங்கிவிட்டது இப்படி சுருங்கியதால் மிகப்பெரிய நன்மைகள் இருப்பதைப் போல் தீமைகளும் இருக்கிறது என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இன்று இணையத்தளத்தின் வருகையினால் முகநூல் எனப்படும் பேஸ்புக் பாவனை சிறுவர் முதல் பெரியோர் வரை அதிகமானவர்களைப் பாதித்துள்ளது. இதனைப் பொழுதுபோக்காகப் பயன்படுத்துகிறோம் என்று கூறுபவர்களில் மாணவர்களும் அடக்கம். இதனைப் பயன்படுத்துவதால் மாணவர்கள் கல்வியிலும் தனிமனித ஒழுக்கத்திலும் பாதிப்பையே எதிர்கொள்ளுகின்றனர்.

இன்று நண்பர்களைச் சேமிக்கிறோம் என்று சொல்லித்தான் நட்புவட்டத்தை உருவாக்குகிறார்கள். ஆனால் இந்த இணையத்தளத்தில் எப்படிப்பட்ட நட்பு உருவாகிறது என்றால் மிகவும் ஆபாசமாகவும், அந்தரங்கத்தை வெளிப்படுத்தக் கூடியதாகவும் மொத்தத்தில் ஒரு உண்மை மனிதன் அங்கீகரிக்க முடியாதவகையில்தான் இருக்கிறது.

ஆரம்பத்தில் வேறுவிதமாக நட்பு என்ற பெயரில் உருவெடுக்கும் இந்த உறவு காலப்போக்கில் ஒழுக்கத்திற்கு மாறான தொடர்புகளாக மாறுவதை எவரும் மறுக்க முடியாது.அத்துடன் இப்படிப்பட்ட தொடர்பால் பாதிக்கப் பட்டு வாழ்க்கை இழந்தவர்களின் வரலாறுகளும் பல உண்டு என்பதும் உண்மை.

அடுத்ததாக மாணவர்களை, இளைஞர் சமுதாயத்தில் பலரை தற்பெருமை மிக்கவர்களாக உருவாக்குகின்றது. தங்களின் இயல்பான வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளை , புகைப்படம் , குறும்படம் மூலம் பகிர்ந்துக்கொள்ளுதல் என்பது ஏற்றுகொள்ளகூடியதாக இருந்தாலும், அதைவிட அதிகமாக தன் நிலைமைக்கு மீறிய இயல்புவாழ்கைக்கு புறம்பான ஒரு பெருமை உலகை காண்பிக்கும் வகையிலேயே தகவல்கள் பதியப்படுகின்றது. பிறருடைய புகைப்படம் மற்றும் தகவல்கள் மூலம், தன்னிலைக்கு மீறிய வாழ்க்கைத் தரத்தை வாழ முற்படுத்துகின்றது.

இதனால் பெற்றோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் இடையே மன உளைச்சலையே முகநூல் விதைக்கின்றது.

மாணவர்கள், தகவல் பகிர்தல், இணையவழி விளையா ட்டுக்கள் என சமூக வலைத்தளங்களில் அதிகமான நேரங்கள் சிலவிடுகின்றனர். இதனால் அவர்கள் தங்களின் கல்விக்காக செலவளிக்கும் நேரம் குறைவடைகிறது. மனம் தேவையற்ற விடயங்களில் நாட்டமடைகிறது. இதனால் கல்விநிலையில் பின்னடை கின்றனர். புதிய ஒரு கண்டுபிடிப்பை நிகழ்த்தவோ, ஆக்கபூர்வமாகச் சிந்திக்கவோ முகநூல் தடையாக அமைகின்றது.

மேலும் உடற்பயிற்சிக்குரிய நேரம் பாதிக்கப்படுகிறது. விளையா ட்டுகளில் ஈடுபடாததாலும், அதிகமான நேரம் கணினி அல்லது தொலைபேசியினை உற்று நோக்குவதாலும், கண் பாதிப்புகளும் ஏற்படுகின்றது. மனதளவிலும் அவர்களின் எண்ணங்கள் எப்பொழுதும் அதையே சிந்திப்பதனால் உளவியல் ரீதியாகவும் பாதிப்பை எதிர்கொள்ளுகின்றனர்.

நேருக்கு நேர் ஆரோக்கியமில்லா வாக்குவாதங்களில் ஈடுபடுகின்றனர் தம்மைப் பற்றிய அனைத்து உண்மைத் தகவல் களையும் பொதுவில் பகிர்வதால் பெற்றோருக்கு பலவிதமான சிக்கல்களை ஏற்படுத்துகின்றனர்.

திசை திருப்பும் தகவல்களை ரசிக்கும் வகையில் கொடுத்து வாசிப்பவர்களை மூளைச் சலவை செய்யும் நபர்களும் உண்டு. அதேநேரம் தவறான நடத்தைகளுக்கு வழிப்படுத்தும் நபர்களும் மாணவர்களை பெருமளவில் கவர்ந்து தமக்கேற்ற வகையில் மாற்றுகின்றனர். இதனால் அதிகமான மாணவர்கள் ஏமாற்றமடைந்தும் ஒழுக்கப்பிறழ்வான செயல்களில் ஈடுபடவும் துணிகின்றனர்.

எனவே முகநூல் போன்ற சமூகவலைய தளங்களை பெற்றோர்கள், பிள்ளைகள்ஒன்றாகக்கூடிச் சிந்தித்து உள, உடல் ஆரோக்கியத்தையும் பேணும்வகையில் கையாளுதல் நன்மை தரக்கூடியதாகும். மாணவப் பருவத்தில் முகநூல் பயன்பாட்டைத் தவிர்த்து கல்வியில் கவனம் செலுத்தினால் எதிர்காலம் சிறப்பாக அமையும் என்பது திண்ணம்.

தேடி எழுதியவர் :
**செல்வி வி. சாமந்தியா**
**தரம் 12 (2019)**
**வர்த்தகப்பிரிவு.**

# பொது அறிவு

1. மிகக் குறைந்த வயதில் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றவர்?

மலாலா யூசுஃப் ஸயீ

2. உலகில் கூடுதலான நாடுகளைக் கொண்ட கண்டம் எது?

ஆபிரிக்கா

3. யாழ்ப்பாண வைபவமாலை எனும் நூலை எழுதியவர் யார்?

மாதகல் மயில்வாகனப் புலவர்

4. இரவு நேரத்தில் மலரும் பூவகை எது?

கடுபுல்

5. அதிக மூளை வளர்ச்சி அடைந்த மிருகம் எது?

குரங்கு

6. குறிஞ்சிப்பூ எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும்?

12 ஆண்டுகளுக்கொருமுறை

7. உலகில் அதிக மக்களால் பேசப்படும் மொழி எது?

சீனமொழி - மெண்டரின்

8. இலங்கையின் அழகான நீர்வீழ்ச்சி எது?

துன்ஹிந்த

9. இலங்கையின் கலாசார முக்கோண வலயங்கள் எவை?

அனுராதபுரம், பொலநறுவை, கண்டி

10. ஐக்கிய நாடுகள் தினம் எப்போது கொண்டாடப்படுகின்றது?

ஒக்டோபர் 24

11. இலங்கையின் தற்போதைய கல்வியமைச்சர் யார்?

அகிலவிராஜ் காரியவசம்

12. புற்கள் மஞ்சள் நிறமாகப் பழுப்பேறுவதற்குக் காரணமான குடிநீர் மாசு எது? புளோரைட்டு

13. ஓசோன் படையின் தடிப்பை அளவிடும் அலகு எது? டொப்சன்

14. உலகிலேயே மிகப் பழமையான தேசப்படத்தை வரைந்தவர் யார்?

தோலமி

15. உலகில் எரிமலை இல்லாத கண்டம் எது? அவுஸ்திரேலியா

*மாணவர்களுக்கான மாதிரிச் சிறுகதை*

# வண்டிற்சவாரி

- அ.செ.முருகானந்தன்

## I

இறைப்பு ஆரம்பமாயிற்று.

ஆளை ஆள் தெரியாத இருட்டு. துலாவில் இரண்டுபேர் ஏறினார்கள். பட்டைக் கொடியை ஒருத்தன் பிடித்தான். பரந்து கிடந்த புகையிலைத் தோட்டத்துள்ளே இன்னொருத்தன் நுழைந்தான். துலா மேலுங் கீழுமாக ஏறி இறங்கிற்று."ஆறுமுக வேலனுக்கண்ணனாமடி" என்று துலாவில் நின்ற ஒருத்தன் ஆரம்பித்தான்.மற்ற இருவரும் அதற்குப் பிற்பாட்டு இழுத்தார்கள்.

இந்த அமளியில் பக்கத்தே பூவரசு மரத்தில் அரைக்கண் உறக்கம் உறங்கிக் கொண்டிருந்த சேவல் கோழி ஒன்று சிறகடித்துக் கூவியது. அதைப் பின்பற்றி அந்த வட்டாரத்திலுள்ள ஒன்றிரண்டு கோழிகள் ஒவ்வொன்றாகக் கரகரக்கத் தொடங்கின. இறைப்புக்காரரின் கச்சேரிக்குப் பொருத்தமான பின்னணியாக அது வாய்த்து விட்டது.

ஒரு மணி கழிந்தது.இருள் சிரித்தது.கீழ்வானம் வர்ணஜாலம் காட்டிற்று.கச்சேரி ஸ்வரம் இறங்கி உள்ளே உள்ளே போய்க் கொண்டிருந்தது.காலை இளந் தென்றலில் புகையிலைக் கன்றுகள் சிலுசிலுத்தன.பசுமை சொட்டிக்கொண்டிருந்த அவற்றின் இலைகள் கண்ணுக்கு மிகவும் குளிர்ச்சியாகவிருந்தன.ஏறி இறங்கிச் சோர்ந்து போனவர்களுக்கு இந்தக் காட்சி ஒருவகை உற்சாகத்தையும், சுறுசுறுப்பையும் அளித்தது.

மண்காவி ஏறிய கொடுக்கு இடுப்பில் அதே செம்பாட்டு நிறத்தில் பாதித் தலையை மூடிய ஒரு தலைப்பா வாயில் ஒரு குறைச்சுருட்டு, தோளில் ஒரு மண்வெட்டி இத்தனை அலங்காரத்தோடும் ஒருத்தன் வந்தான்.இறைப்பு அமைதியாய்ப் போய்க் கொண்டிருந்தது.

"கூய் எங்கே.தண்ணியைக் காணவில்லை." தூரத்தே புகையிலைக் காட்டிலிருந்து திடீரென்று இப்படி ஒரு குரல் எழும்பிற்று.எல்லோரும் ஒருகணம் திடுக்கிட்டுப் போய் நாற்புறமும் சுற்றிச் சுற்றிப் பார்த்தார்கள்.அள்ளி ஊற்றிய தண்ணீர் ஒரு பக்கத்திலே உடைத்து ஆறாகப் பெருகிக் கொண்டிருந்தது. "ஓடு ஓடு அங்கே உடைத்துவிட்டது, ஓடிப் போ" என்று மூன்று குரல்கள் அதைப் பார்த்துக் கத்தின. மண்வெட்டி கொண்டுவந்தவன் ஓடிப்போய் உடைப்புக்கு மண் வெட்டிப் போட்டு அதை அடைத்துவிட்டுத் திரும்பி வந்தான். ஸ்தம்பித்துப் போயிருந்த

இறைப்பு மறுபடியும் ஓடத் தொடங்கிற்று.

"சின்னத்தம்பி நல்ல சமயத்தில் வந்தாயப்பா" என்று உபசாரங் கூறினான் இறைத்துக்கொண்டு நின்றவன்.

"அது கிடக்கட்டும் அண்ணே!வல்லிபுரக் கோயிலுக்கு எப்போ வண்டில் பூட்டிறியள்?அல்லது இம்முறை பூட்டாமலே விடுகிற யோசனை.?"

நல்லாயிருக்கு வரிசத்திலே ஒருக்கா வருகிற இதைக்கூட விட முடியுமோ?அதுவும் போக."

"ஓ! சொன்னாப்போல் இந்த முறை சவாரிச் சங்கதி ஒண்டும் இருக்குதல்லோ..?"

"வேறென்ன?என்னவோ குருட்டுவாக்கிலே அன்றைக்குத் தச்சன் காட்டில் காரியம் பார்த்து விட்டான்கள்.வாற சனிக்கிழமை அந்தக் கெட்டித்தனத்தைக் காட்டட்டும் பார்ப்போம்.சனிக்கிழமை பூச்சியன்கள் கழுகன் சோடிகளை இறக்கி எடுக்காவிட்டால் நான் இந்தச் சவாரி வியாபாரத்தையே அன்றோடு கைகழுவி விட்டு விடுகிறேன்."

“சரி சரி, எல்லாம் நடக்கட்டும்.ஆனால் சண்டை கலாதி ஒண்டும் இல்லாமல் நடந்து முடியட்டும்."

இத்துடன் சின்னத்தம்பி அவ்விடத்தை விட்டுக் கழண்டு விட்டான்.தூரத்தே புகையிலைக் கன்றுகளுக்குள்ளிருந்து மனித சாரீரம் எட்டக் கூடிய உச்சஸ்தாயியில் “கூய்“ என்றொரு குரல் பிறந்தது.இறைப்பு நின்றது.

## II

அமாவாசை வந்த பதின்மூன்றாம் நாள். இரவு முழுவதும் ஜெகஜ்ஜோதியான நிலவு.யாழ்ப்பாணத்தின் வடகோடியிலே பரந்து கிடக்கும் அந்த நீண்ட மணற்பிரதேசத்தைப் பகற்காலத்தில் வெயில் தகித்து அக்கினிக் குண்டமாக்கி விடும். ஆனால், வளர்பிறைக் காலத்து இரவோ இதற்கு மாறான நிலமை.வெண்மணற் பிரதேசம் முழுவதிலும் சந்திரன் தனது அமுத கிரணங்களை வாரி இறைத்து அதைக் குளிர்ச்சி மயமாக்கிவிடும். கண்ணுக்கெட்டிய தூரம் பாற்கடலைப் போல் பரந்து கிடக்கும் மணல்வெளியை இரண்டாகப் பிளந்து செல்லும் அந்தத் தெருவழியே நிலாக்காலத்தில் மாட்டு வண்டிப் பிரயாணஞ் செய்வதில் ஒரு தனி இன்பம் உண்டு. அந்த இரண்டுக்குமே ஒரு தனிப்பொருத்தம் என்று சொல்லவேண்டும். வருஷம் முந்நூற்றி அறுபத்தைந்து நாளும் மண் கிண்டி, தண்ணீர் ஊற்றி, அலுத்துப்போகும்

தோட்டக்காரனுக்கு மனச்சந்தோஷத்துக்கும், ஆறுதலுக்கும் உகந்த ஓர் அருமையான பிரயாணம் இது. வழிநெடுகப் பால் போன்ற வெண்ணிலவு வானமும் பூமியும் ஒன்றாகும் ஒரே வெளி. இவற்றைக் கடந்து கோயிலை அடைந்தால் அங்கேயும் கோயிலைச் சுற்றிலும் ஒரே வெண்மணல் வெளியும், பால்நிலவும் தென்றற்காற்றும்தான். இவற்றோடு கோவிலிலேயிருந்து நாதசுரம் இன்னிசையை பிழிந்து மிதந்து வரும் தென்றலிலே அனுப்பிக் கொண்டிருக்கும். பாமரன் உள்ளத்தின் மலர்ச்சிக்கும் குதூகலத்துக்கும் இன்னும் என்ன வேண்டும்?

வருஷா வருஷம் வல்லிபுரக் கோயிலுக்குக் கூட்டம் கூட்டமாக சனங்கள் அள்ளுப்படுவதற்குக் காரணம் வேறொன்றுமில்லை, வல்லிபுரப் பெருமான் மேல் உள்ள பக்தி சிரத்தையினால் அல்ல. எல்லாம் அந்த மணற்காட்டுக்கும், அங்கே எறிக்கிற வெண்நிலவுக்கும், ஆடல் பாடலுக்கும்தான். சுருங்கச் சொன்னால் அன்றைய தினம் வல்லிபுரப் பெருமாளுக்குக்கூட கோவிலுக்குள் அடைபட்டுக்கிடக்க மனம் வராது.தென்றலும், இன்னிசையும், வெண்ணிலவும், பால்மணலும் சேர்ந்து வல்லிபுரக் கோவிலை - பகலில் கண்கொண்டு பார்க்க முடியாத காண்டாவனத்தை - ஓர் அமர உலகமாக மாற்றிவிடும்.

இந்த அமர உலகைத் தரிசிக்க வருகின்ற பக்தகோடிகளின் வழிப் பயண இன்பத்தைக் கொஞ்சம் பார்க்கலாம்.

ஐம்பது வருஷத்துக்கு முந்திய பயண வண்டி ஒன்று. அதைப் பார்க்க எவ்வளவோ சந்தோஷமாயிருக்கிறது! ஒரு பெரிய குடும்பம் தாராளமாக வசிக்கக்கூடிய வீடு அது! மேல்மாடிகூட அதில் உண்டு. சட்டி, பானை, பெட்டி, படுக்கை எல்லாம் வண்டிக்கு மேலேயும் கீழேயும் ஊஞ்சலாடுகின்றன.வண்டிக்குள்ளே வைக்கோல் மெத்தை. புருஷன், மனைவி, தாய், பிள்ளை, பேரன், பேத்தி எல்லோரும் இருந்து கதைத்துச் சிரித்துக் கொள்கிறார்கள். மேல் மாடியிலே இரண்டொருகுழந்தைகள் தூங்குகின்றன.இன்னொரு சிறு குழந்தைக்குப் பசி. அதற்குத் தாயார் சோறு பிசைந்து கொடுக்கிறாள். இத்தனை வைபவங்களுடன் வண்டி ஊர்ந்து ஊர்ந்து போகிறது.

ஹகுட்" மடித்த மோட்டார்கள் பாட்டோடும் தாளத்தோடும் பறக்கின்றன.அவற்றைப் பின்பற்றி சைக்கிள் வண்டிகளும் ஒருபுறம் கிணுகினுத்துக் கொண்டு ஓடுகின்றன.கால்நடைப் பக்தகோடிகள் பாட்டுக் கச்சேரி, சிரிப்புக் கச்சேரி, கூக்குரல் கச்சேரி எல்லாவற்றோடும் கூட்டங்கூட்டமாகப் போகிறார்கள். மிருகத்துக்கும், மனிதனுக்கும், மெஷினுக்கும் வெண்ணிலவு ஒரே அளவாகப் பொழிகின்றது.வழி நெடுக இப்படியே உல்லாசமான ஊர்வலம்.இன்னும் சிறிது மேலே போனால் இந்த இயற்கை அற்புதத்தால் உற்சாகம் மேலிட்டுவிட்ட

பேர்வழிகளைப் பார்க்கலாம்.வாலிபத்தோற்றங் கொண்ட மொட்டை வண்டிகள் நூற்றுக் கணக்கில் குவிந்து நிற்கின்றன.வண்டிச்சவாரி நடக்கப் போகின்றது.

சரி, இரண்டு வண்டிகள் முன்னே வந்துவிட்டன. மாடுகள் பூட்டியாய் விட்டன.குத்தூசி, சவுக்கு, துவரங்கம்பு - எல்லாம் அவரவர் கைக்கு வந்துவிட்டன. வண்டி ஓட்டுகிறவர்கள் ஆசனங்களில் ஏறிவிட்டார்கள்.

"சின்னத்தம்பி!" என்கிறான் முன் வண்டிக்காரச் சாரதி."சரி, சரி எல்லாம் தெரியும்" என்றான் வண்டியில் சவுக்கும் கையுமாக நின்ற ஒருத்தன்.

வண்டிகள் கிளம்பிவிட்டன."கடகட"வென்ற முழக்கத்தோடு ஒன்றை யொன்று உராய்ந்து கொண்டு அந்தரநிலையில் பறக்கின்றன.இதோ அதோ?சவுக்குகள் "நொய் நொய்" என்று கீச்சிடுகின்றன.குத்தூசிக்காரன் வண்டியில் படுத்துக்கொண்டு சாவகாசமாக மாடுகளுக்கு ஊசி ஏற்றினான்.துவரங் கம்புகள் சடார் சடார்" என்று விழுந்தன.

கழுத்தில் வெள்ளைப் புள்ளிகள் விழுந்த வண்டி மாடுகள்.இவைதான் பூச்சியன்களோ? முன் வண்டியைத் தாண்டி விடுகிற சமயம் - இதோ தாண்டிவிட்டன.ஒரு நொடிக்குள்.இதோ.

"ஐயோ! அம்மா"

பூச்சியன்" வண்டியிலிருந்து ஒருத்தன் சுருண்டு கீழே விழுந்தான்.

## III

மல்லாகம் பொலீஸ் கோர்ட்டில் அன்றைக்கு ஒரு முக்கியமான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இத்தனை நாளும் அதற்குப் போடப்பட்ட தவணைக்கு ஒரு அளவில்லை. இரண்டு கட்சிக் காரரும் "வேண்டாம் அப்பா இந்தக் கோர்ட்டு விவகாரம்" என்று சொல்லிக் களைத்துப் போகும் சமயத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்குக் கொடுத்தது, அதாவது வாதி கந்தையர் பூச்சியன் கந்தையா என்றால்தான் தெரியும், சவாரி உலகில் பூச்சியன் கந்தையா ஒரு மங்காத தீபம்! எதிரி, கழுகன் செல்லையாவும், சின்னத்தம்பியும். முறைப்பாடு என்னவென்றால், அவர்கள் இருவரும் வல்லிபுரக் கோயிலுக்குப் போகும் வழியில் வண்டிச்சவாரி நடக்கும்போது தன்னைச் சவுக்கால் அடித்துப் படுகாயப்படுத்தியதுடன் பிராணாபத்தும் உண்டாக்க எத்தனித்தது என்பது.

சின்னத்தம்பியும் "கழுகன்" செல்லையாவும் கோர்ட்டுப் புள்ளிகள்.அதாவது இப்படி எத்தனை எத்தனையோ வழக்குகளுக்கும், முறைப்பாடுகளுக்கும் வகை சொல்லிக் கைதேர்ந்தவர்கள். அப்புக்காத்துமாரையும், பிரக்கிராசிமாரையும், கோட்டை முனியப்பரையும் கைக்குள் போட்டுக்கொண்டு வானத்தை வில்லாகவும், மணலைக் கயிறாகவும் திரித்துவிடக்கூடியவர்கள். சட்ட உலகத்தின் நுட்பங்களையும் சூதுவாதுகளையும் தெரிந்தவர்கள். கந்தையாவுக்கோ இவையெல்லாம் ஓடாது. ஒரு பாவி சின்னத்தம்பியும் செல்லையாவும் செய்த அட்டுழியத்தைப் பொறுக்கமுடியாமல் போய் வழக்குத் தொடுத்து விட்டார்.நீதி அநீதியைத் தெய்வம் கேட்கட்டும் என்று சிவனே என்று இருந்துவிட்டார்.இந்தக் காலத்தில் நீதி அநீதியைக் கேட்பவர்கள் யார் என்பது செல்லையா கோஷ்டிக்குத் தெரியும். அவர்கள் அதற்கான வேலையை இரவுபகலாகச் செய்து வந்தார்கள்.

விசாரணை தினத்தன்று செல்லையாவும் சின்னத்தம்பியும் விசாரணை செய்யப்பட்டார்கள். அவர்கள் சொல்லியது: "தச்சன் காட்டில் நடந்த சவாரியில் கந்தையாவின் பேரான பூச்சியன் சோடிகளை என்னுடைய கழுகன் இறக்கிவிட்டன. அதிலிருந்து அவருக்கு எங்கள் மேல் பெரிய ஆத்திரம். வல்லிபுரக் கோயிலுக்குப் போகும்போது அவரும் அவரோடு வண்டியிலிருந்தவர்களும் நன்றாகக் குடித்துவிட்டு வந்து என்னை மாடுவிடும்படி கேட்டார்கள்.நான் முதலில் மறுத்து விட்டேன்.அவர்களுடைய தொந்தரவு பொறுக்க முடியாமல் பின்னர் ஒப்புக் கொண்டு மாடு பூட்டினேன்.என்னுடைய வண்டில்தான் முன்னுக்குப் போனது. கந்தையாவின் வண்டில் பின்னுக்கு சவாரி ஓடும்போது கந்தையா வண்டியிலிருந்து விழுந்ததைப் பார்த்தேன்.வேறொன்றும் எனக்குத் தெரியாது."

கந்தையாவின் வண்டியில் அன்று போன இரண்டொருத்தன்கள் இந்த வாக்குமூலத்துக்கு "ஓம்" வைத்துச் சாட்சியங் கூறினார்கள். அதாவது தாங்கள் அன்றைக்குக் குடித்திருந்ததாக ஒப்புக் கொண்டார்கள்! உண்மையில் அன்றைக்கு அவர்கள் ஒருவருமே குடித்திருக்க வில்லை. குடியாமலே எத்தனையோ ஜனங்களுக்கு முன்னால் தாங்கள் குடியர்கள் என்ற பட்டத்தைத் தங்களுக்குத் தாங்களே சூட்டத் துணிந்து விட்டார்கள்! விநோதப் பிறவிகள்!

வழக்கு முடிவைச் சொல்லவேண்டியதில்லை.செல்லையா கோஷ்டியினர் சொல்லியது போல, கந்தையாவின் வழக்குப் பறந்து போய் விட்டது!'

## IV

பட்டணத்து இரைச்சலுக்கும் பரபரப்புக்கும் ஒரு சிறிது விலகி பரந்து கிடக்கும் பசும்புல் வெளியிலே ஒரு கோவில், சிறிய கட்டிடம்.டச்சுக்காரன் கட்டிவிட்ட அந்தப் பிரமாண்டமான கோட்டைக்கு முன்னாலே இந்தக் கோயிலின் சிறுமையை நன்றாக உணரலாம்.இதுதான் கோட்டையடி முனியப்பர் வாசஸ்தலம். யாழ்ப்பாணத்திலே கோட்டுப் புள்ளிகளின் கண்கண்ட தெய்வம்.

திருவிழா ஒன்று நடைபெறுகிறது.வழக்கில் வென்ற சின்னத்தம்பி - செல்லையா கோஷ்டியாரின் உபயம் திருவிழாவின் கலாதியைச் சொல்லவேண்டாம். செல்லையா கோஷ்டியாருக்குச் சாதகமாக வழக்கைத் தள்ளிவிட்ட அந்த நீதிபதி அவரை அறியாமலே பதினைந்து ஆடு கோழிகளின் தலையெழுத்துக்கும் அன்றைக்குத் தீர்ப்பளித்து விட்டார்.

வழக்கு வெற்றியைக் கொண்டாடுவதற்கு சின்னத்தம்பி கோஷ்டிக்கு இந்த ஒன்று மட்டும் திருப்தியளிக்கவில்லை.இது சாதாரணமாக நடத்தும் ஒரு சில்லறைக் காரியம்.

கந்தையாவைத் தாங்கள் வழக்கில் தோற்கடித்துவிட்டால் ஊரிலே உள்ள வைரவர் கோவிலில் ஒரு பெரிய திருவிழாச் செய்வதாக வைரவ சுவாமிக்கு வேண்டுதல் செய்திருந்தார் செல்லையா. “பொல்லாத வைரவர் ஆகையால் அவர்கள் அவரை அலட்சியம் செய்வதற்கில்லை.

ஒரு பெரிய திருவிழாவுக்கு ஏற்பாடு செய்தார்கள்.பெரிய மேளங்கள், சின்ன மேளங்கள் அத்தனையும், முத்துச்சப்பறம், லைட்மெஷின் அத்தனையும் பங்குபற்ற இரவுபகலாக ஒருநாள் முழுவதும் திருவிழா நடைபெற்றது.வாணவேடிக்கைக்கு நூற்றுக்கணக்கில் ரூபா ஒதுக்கியிருந்தார்கள்.

## V

இவையெல்லாம் நடந்து முடிந்து ஒரு கிழமைக்குப் பின்,
கழுகன் செல்லையா வீட்டில், மனைவி புருஷனைக் கேட்கிறாள்:
"அண்டைக்குத் திருவிழாவிலே வேலனை அடித்துப் போட்டீர்களாமே, எதற்காக?"

“எதற்காகவா?சபைப் பழக்கம் தெரியாத மாடுகள் கோயிலுக்கு உள்ளே வந்து நுழைந்து விடுவான் போல நின்று எட்டி எட்டிப்பார்த்தானே.

"அதுபோக, பெட்டிக்குள்ளே கழட்டிவைத்த என் கழுத்துக்கொடி எங்கே?வைத்த இடத்தில் காணவில்லை."

செல்லையா ஆடு திருடிய கள்ளனைப் போல முழிசினார்.

இந்தச் சமயத்தில் தெருவிலே இரண்டுபேர் கதைத்துக்கொண்டு போனார்கள்:

"பூச்சியன் கந்தையாவின் திமிரை செல்லையா அண்ணை அடக்கிப் போட்டார்.அவன் இனிமேல் தலை தூக்கமாட்டான்.அண்டைக்கு நடந்த திருவிழாவைப் பாத்தியா? ஒரு திருவிழாவும் இப்படி நடக்கேல்லை. எப்படியானாலும் செல்லையா அண்ணர் ஆள் கெட்டிதான்."

சகதர்மிணி அம்மாளுக்கு முன்னால் அஞ்சறிவும் ஒடுங்கிப்போய் நின்ற செல்லையா அண்ணைக்கு மனங் குளிர்ந்தது. தான் எங்கேயோ ஆகாசத்தில் பறப்பது போன்ற உணர்ச்சி அவருக்கு உண்டாயிற்று.

"ஈழகேசரி" O9.01.1944

## கலை ஊற்று மலர்க்குழு-2017

இணை இதழாசிரியர் : செல்வன் அ.விதுசன்
செல்வி யோ.தாரணி

உறுப்பினர்கள் : செல்வி பா.பிரியங்கா
செல்வி சி.தீசனா
செல்வி சி.சஜிதா
செல்வி இ.சந்துஜா

ஆலோசனை : செல்வி ஜானகி கிருஷ்ணபிள்ளை
திரு சு.குணேஸ்வரன்
திரு து.ராமதாஸ்
திரு த. ரூபரஞ்சன்
திரு சி.சிவனேஸ்வரன்

# உயர்தர மாணவர் மன்றம்

## செயற் குழு-2017

காப்பாளர் : திரு இரா. ஸ்ரீநடராசா
பொறுப்பாசிரியர் : திரு செ.கணேசலிங்கம்
தலைவர் : செல்வன் நா.மகீபன்
உபதலைவர் : செல்வி வி.சாமந்தியா
செயலாளர் : செல்வன் பா.பாஸ்கரன்
உபசெயலாளர் : செல்வன் சி.நுசாருகேசன்
பொருளாளர் : செல்வி த.உஷாலினி
இணை இதழாசிரியர் : செல்வன் அ.விதுசன்
செல்வி யோ.தாரணி

நிர்வாக உறுப்பினர் : செல்வி சி.கயந்தினி
செல்வி சி.சஜிதா
செல்வன் த.பிருந்தன்
செல்வன் கா.விமல்ராஜ்
செல்வன் செ.செந்தில்குமரன்
செல்வி இ.சந்துஜா
செல்வி செ.யாழினி
செல்வன் அ.பர்மிகன்

வழிகாட்டல் ஆலோசனை :

திரு த.இராஜசேகரன்
திரு நா.ரவீந்திரன்
செல்வி ஜானகி கிருஷ்ணபிள்ளை
திரு இ.உதயசங்கர்
திரு செ.கணேசலிங்கம்
திரு க.சுதர்சன்
திரு சு.குணேஸ்வரன்
திரு வீ.வீரகுமார்
திரு தெ.சுகுமார்
திரு சி.வசந்தகுமார்
திரு த.ரூபரஞ்சன்
திரு ப.காஞ்சன்
திரு மா.செல்வரட்ணம்
திரு சி.சிவனேஸ்வரன்
திருமதி தே.யோகேந்திரன்
செல்வி சு.குணசிங்கம்
திருமதி சு.கண்ணதாசன்
திருமதி சா.விஜயசங்கர்
திருமதி து.ஞானச்சந்திரன்
திருமதி சு.திரேஸ்குமார்
செல்வி செ.செல்வரஞ்சினி



கலைப்பிரிவு, தரம்–13 (2017)



கலைப்பிரிவு, தரம்–13 (2018)



கலைப்பிரிவு, தரம்–12 (2019)




வர்த்தகப்பிரிவு, தரம்–12 (2019)



உயர்தர மாணவர் ஒன்று கூடலில்
பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட
இலங்கை மத்திய வங்கியின்
முகாமைத்துவ உதவியாளரும்
வித்தியாலயத்தின் பழைய மாணவியுமாகிய
செல்வி வினோதா பரமானந்தம்



